# வெற்றிமணி

London
GERMANY

Vettimaniy

மணி 65 | free Circulation | ஐப்பசி. Oct. 2015







# ஜே.ஆர் முதல் மஹிந்த வரை நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கை?

இலங்கையில் இருந்து -அ.நிக்ஸன்-



## காதலியின் தோளில் கைபோடலாமா?

-சேவியர்




இது உயிரோவியமா?



## நீங்கள் எந்த வகைத் தம்பதியர்

## சினிமா சினிமா



24.10.2015



செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

எம்மிடம் தாலிக்கொடிகள்
செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள்
பட்டுப்புடவைகள் அனைத்தும்
50% விலைக்கழிவில்

162 B, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269



New Asia Fashions
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் விலைத்தளுபடி!
எமது இணையத்தளத்திற்கு சென்று விரும்பிய ஆடைகளை ஓடர்செய்யலாம்.
http://www.newasiafashions.com
Email-info@newasiafashions.com



நீயூ ஏசியா ஆடையகம்

307 Mitcham Road
Tooting-London
SW17 9JQ
00442035811020
00447448179777


தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி







# இதுதான் உயிரோவியமா!

ஓவியக்கலை மனித இனத்தின் பிறப்புடன் ஆரம்பமான ஒரு கலை. இன்று ஆதிமனிதனின் குணாதிசயங்களை அறிய, அவன் பதிவுசெய்த ஓவியமே உதவுகின்றது. இன்று கணனிபோல் அன்று உலகின் வரலாற்றை பதிவு செய்துவைத்த பெருமை இந்த ஓவியத்திற்கு உண்டு.

இன்று வராலாற்றுப்பதிவுகளை ஒளிப்படம் தனதாக்கிக் கொண்டு விட்டதால் ஓவியம் அப்பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டது. ஒரு கலைஞனின் ஓய்வும்,ஒரு கலையின் ஓய்வும் மற்றொரு பாச்சலுக்கான பதுங்கலாகவே கொள்ளவேண்டும். கால ஓட்டத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளாதவன் விரைவில் அழிந்துபோவான். அது மனிதனுக்கு மட்டுமல்ல கலைக்கும் பொருந்தும். சினிமா வாக இருக்கலாம். இசையாக இருக்கலாம். காலத்தை உள்வாங்கியபடியால்தான் இன்றும் நிலைத்து உள்ளது. பழமையை மறத்தலோ அழித்தலே என்று பொருள் அல்ல. புதுமையை உள்வாங்கல் என்பதே உண்மை.



உயிரோவியம் என்று முன்னர் ஒரு ஓவியத்தைக் குறிப்பிட்டால், அந்த ஓவியம் மூச்சுவிடும். எழுந்து நடக்கும். தனிமையில் எம்மோடு ஆயிரம் கதைபேசும். அத்தனை தத்துருபமாக ஓவியம் இருக்கும். இன்றும் லியனோ டாவின்சி வரைந்த மொனலிசாவின் புன்னகையை அறிய ஆய்வுகள் ஆண்டுக் கணக்காக இடம் பெற்று வருகின்றன.

புன்னகையின் அர்த்தம் வருடம் ஒன்றுக்கு ஆயிரமாகிக் கொண்டே செல்கின்றது. எந்த மனோதத்துவ நிபுனராலும் ஒரு குறித்த அர்த்தத்தை சொல்ல முடியவில்லை. அன்று லியனோ டாவின்சி வரைந்த மோனலிசா Mona Lisa உயிர் ஓவியம்.(1507-1517) இன்று ஓவியம் ஓவியம் தீட்டுகிற காலம் எனலாம்.

அழியும் உடலில் அழியாத ஓவியங்களை அன்று தொட்டு இன்றுவரை தீட்டிவருகின்றனர். அந்த ஓவியம் வேறு. இப்போ நீங்கள் இங்கு படத்தில் காணும் ஓவியம் வேறு.
முன்பு ஓவியம் கலைஞனால் உயிரோவியமானது.
இப்போ உயிர் ஒன்று ஓவியமாகிறது. முன்பு ஓவியத்தை உயிர்பெறவைக்க வர்ணங்களையும், கோடுகளையும் பாவித்து அந்த வர்ணகளுக்கு இடையில் உயிரைச் சிறப்பிடித்து வெளிக்காட்டுவர்கள். இன்று உயிருக்கு வர்ணம் அடித்து, கோடுகள் இட்டு உடம்பை ஓவியமாக்கி மகிழ்கின்றனர்.



படத்தில் ஒரு பெண் ஓர் ஆணின் மேல் அமர்ந்து, அந்த ஆணை ஓவியமாக்குவதில் தன்னை மறந்து ஈடுபடுவதைக் காணலாம். முன்பு ஓவியம் உயிர்பெற உழைத்த தூரிகை, இப்போ உயிர் ஓவியமாக உழைக்கின்றது.

காலத்தின் மாற்றம் உயிர் ஓவியமாகும் காலம் ஆகிவிட்டது. இந்த ஓவியத்தை நேரே பார்ப்தைவிட அதனை ஒளிப்படம் எடுத்து அதனைப்பார்த்தால் அது அற்புதமான ஓவியமாகத் தெரியும்.

ஓவியரே ஓவியத்துடன் கைகொடுத்து படமும் எடுக்கமுடியும்.
இவை (3D) அதாவது முப்பரிமாண ஓவியங்களாக தீட்டப்படுகின்றது.

இப்போது அதாவது இக்காலத்தில் நீங்களே ஓவியமும், ஆகலாம்,சிற்பமும் ஆகலாம்.

காலத்தின் கோலத்தில் கலை தலைகீழாக மாறி நின்றாலும். அதனையும் இரசிக்க ஆயிரம் போர் கூடாமல் இல்லை. நாம் கலைக்காக மாறுகிறோமே இல்லையோ, ஆனால் கலை நமக்காக தன்னை மாற்றிக்கொண்டு மேலே மேலே செல்கின்றது.


எனவே மனிதனுக்கு அழிவுண்டு. காலத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் கலைக்கு அழிவு இல்லை.






வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
——————————கவிஞர்.வி.க
ஓசை 229



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962

Vettimaniy has
no responsibility of
the contents of the
articles and
advertisements

# ஜே.ஆர் முதல் மஹிந்த வரை நியமிக்கப்பட்ட

# ஆணைக்குழுக்களின் அறிக்கை?





பிரபல ரக்பி வீரர் வசீம் தஜாதீன் கொலை செய்யப்பட்டமைக்கான ஆதாரமாக அரச வைத்திய சாலையில் பொலிஸாரின் பாதுகாப்புடன் வைக்கப் பட்டிருந்த அவரின் உடற்பாகங்கள் காணமால் போயுள்ளன. இந்த நிலையில் போர்க்குற்றம் பற்றிய உள்ளக விசாரணை எம்மாத்திரம்?
-அ.நிக்ஸன்-

ஜெனீவா மனித உரிமைச் சபை ஆணையாளரின் அறிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்ற கேள்வி எழுந்தது. ஆனால் இரண்டு தினங்களில் அமெரிக்கா சமர்ப்பித்த இலங்கை தொடர்பான பிரேரணையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராட்டியதுடன் அந்த தீர்மானத்திற்கு அனுசரனையாளராக செயற்படவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்ல அமைச்சர்கள் கூட அமெரிக்கத் தீர்மானத்தை பாராட்டியுள்ளதுடன் தமக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றும் கூறியுள்ளனர்.

## தமிழர் நிலை என்ன?

ஆக மனித உரிமைச் சபை ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் மாத்திரமே இலங்கை அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அந்த அறிக்கையின் காரம் குறைவடைந்தமைக்கு புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள்தான் காரணம் என்றும் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன அச்சு ஊடகங்களின் தலைவர்கள் பிரதம ஆசிரியர்களை சந்தித்து பேசியபோது பெருமையாக கூறியிருந்தார். எவ்வாறாயினும் மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் எதிர்நோக்கிய சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபட்டுள்ளது என்பது மட்டும் உண்மை.

இந்த இடத்தில் தமிழ் மக்களின் நிலைமை என்ன? இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன? என்ற கேள்விகளும் சந்தேகங்களும் எழுகின்றன. 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான அரசியல் சூழலில் மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா எடுத்த நகர்வுகள் தமிழர்களுக்கு சாதகமாக இருந்ததாக தோற்றப்பாடு ஒன்று தென்பட்டது. அத்துடன் இந்தியா அதற்கு தடையாக இருப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால் அந்த நகர்வுகள் தமிழர்களுக்கானது அல்ல மஹிந்த ராஜபக்சவை விழுத்துவதற்கான ஒரு ஆயுதம் மாத்திரமே என்றுதான் விமர்சகர்கள் பலரும் கூறியிருந்தனர்.

இலங்கையில் இருந்து -அ.நிக்ஸன்-

## ஆட்சிமாற்றத்தின் பின்னரான நிலைமை

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதியின் பின்னரான சூழலில் இலங்கையில் அமைதியை ஏற்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கை அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளுக்கு ஏற்பட்டது. அதன் பிரதிபலிப்பாகவே மனித உரிமைச் சபை ஆணையாளரின் அறிக்கையின் காரம் குறைந்தது.

அமெரிக்காவின் தீர்மானத்திலும் சர்வேதச விசாரணை என்ற சொற்பதம் நீக்கம் செய்யப்பட்டது. ஆகவே இலங்கை அரசு தமக்கு சாதாகமான விடயங்களை உரிய நேரத்தில் காய்நகர்த்தி வருகின்றது என்று கூறலாம். தமிழர் தொடர்பான சர்வதேசத்தின் ஒவ்வொரு கோரிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் அவ்வப போது புறம்தள்ளி வந்தமைதான் வரலாறு. மஹிந்த ராஜபக்ச மாத்திரமே அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளை புறம்தள்ளி செயற்பட்டார் என்று கூற முடியாது.



சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தபோது 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை இராணுவம் ஆக்கிரமதித்தது. இதனால் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஒரே நேரத்தில் இடம்பெயர்ந்தனர். அப்போது ஐ.நா செயலாளர் நாயகமாக பதவி வகித்த பூட்ரஸ் பூட்ரஸ்காலி இலங்கை அரசாங்கத்தை கடுமையாக எச்சரிக்கை செய்திருந்தார். ஆனால் அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த அமரர் லக்ஸ்மன் கதிர்காமர் அதற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டார். அதுமாத்திரமல்ல ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் வேறு என்றும் உள் நாட்டில் போரில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்றும் லக்ஸ்மன் கதிர்காமர் கூறியிருந்தார். ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்காவும் யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கைப்பறி முடிவடையும் வரை சர்வதேச நாடுகள் கூறிய எந்த ஆலோசனைகளையும் கேட்கவில்லை.

## சந்திரிக்காவும் நிராகரித்தார்.

யாழ்ப்பாணம் கைப்பற்றி முடிவடைந்த பின்னர் மக்களை மீளக் குடியமர்த்தல் மற்றும் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் போராளிகளை விடுதலை செய்வது குறித்த விடயங்களிலும் முற்று முழுதாக சர்வதேச யோசனைகளை சந்திரிக்கா புறக்கணித்திருந்தார்.

தொடர்ச்சி 13ம் பக்கம்...

உலகை வலம்வர
உற்றதுணை நாங்கள்!



Century Travels&Tours

website : www.centurytravels.de

Essan மாநகரில்
எமது கிளையை ஸ்தாபனத்தின்
முகவரி:
Steeler str 150
45139 Essen

பயணங்களை
இலகுவாக்க நம்மை நாடுங்கள்.
இலங்கை கடவுப்புத்தகம்
பெற்றுத்தரவும்
புதுப்பிக்கவும் உதவுவோம்.



Fax: 0231 5844665

இந்தியாவுக்கான
விசா பெற்றுத்
தரப்படும்

Rhenische Strasse 29
44137 Dortmund.Germany

email : info@centurytravels.de
Tel: 0231 58 96 557 /0231 55 74 319

Ram Nishanthan
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
017621682149

# கொத்துரொட்டியும் இராஜநாயகித் தியேட்டரில் படமும்




காங்கேசன்துறையில் பெற்றோல் நிலையத்திற்கு அருகாமையில் காங்கேசன்துறை வீதியிலிருந்த இராஜநாயகித் தியேட்டருக்குப் நான் படம் பார்க்கப் போவதற்கு மூன்று காரணங்கள் இருந்தன. முதலாவதாக எனது சைக்கிள் வெளிச்சவீடு என்று சொல்லுகின்ற கலங்கரை விளக்கோடு இருக்கும் சிறிய பூங்காவிற்கு நேராகச் செல்லும். பூங்காவின் இருக்கையில் அமர்ந்தவாறு கடல் அலையின் ஒலியை இசை ஒலியைக் கேட்பது போல கேட்டு இரசித்தவாறு குளிர்ந்து வீசும் காற்றினால் தலைமயிர்கள் சிலும்ப இவற்றை அடக்க இடையிலே கவிரல்களை வைத்து கோதியபடியே கலங்கரை விளக்கையும் வானத்தையும் பார்த்து இரசித்தபடி உட்கார்ந்திருப்பேன். ஆறரை மணிக்கு படம் பார்க்கப் போக வேணும் என்ற நினைப்பும் அதற்குப் பிறகு கொத்துரொட்டி சாப்பிடப் போகிறேனே என்ற நினைப்பும் இனிமையாகவிருக்கும். அதற்கு முன் கீரிமலை வீதியின் ஆரம்பத்தில் வடமேற்கு மூலையிலிருக்கும் தேத்தன்னிக் கடையில் ஒரு பிளேன்ரீயைக் குடித்துவிட்டு தியேட்டருக்கு வந்து பெரும் எதிர்பார்ப்புடன் கியூவில் நின்றவாறு இன்னும் சில நிமிடங்களில் படம் பார்க்கப் போகிற நினைப்பில் பல கற்பனைகள் மிதக்கும். எம்ஜிஆரின் படமாக இருநதால் படம் பார்க்க நானாகப போய் வரும் போது எம்ஜிஆராக வருவேன். நான் மட்டுமல்ல பல இளைஞர்களிடத்தில் அதைக் கவனிக்கலாம். அரைக்கைச் சட்டையை மேலே இன்னும் மடித்துவிட்டபடியே தியேட்டரை விட்டு வெளியே வரும் இளைஞர்களில் முழக்கைச்சட்டையை முக்கால் கையளவுக்கு மடித்துவிட்டபடியெ திரியும் எனக்கு தியேட்டரை விட்டு வெளியே வரும் எனக்கு டக்கு டக்கு என்று கொத்துரொட்டியை வெட்டிக்கிளறும் சத்தம் சங்கீதமாகக் கேட்கும்.

கொத்துரொட்டிக் கடையை நெருங்க நெருங்க கொத்துரொட்டியின் வாசம் நறுமணமாக மூக்கை வந்தடையும். கொத்துரொட்டிக் கடையின் தகரக் கொட்டில் அப்பொழுது எனக்கு உயர்தர உணவு விடுதியேயாகும்.





கொத்து ரொட்டிக்குச் சொல்லிவிட்டு வாங்கில் உட்கார்ந்திருந்தபடியே ரொட்டித் துண்டுகள், இறைச்சிக் குழம்பு , வெங்காயம், பச்சைமிளகாய் போன்றவற்றை அடுப்பில் சூடேறிக் கொண்டிருக்கும் இரும்புத்தட்டில் போட்டுக் கிளறிக் கிளறி டக்கு டக்கென்று கொத்துவதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பேன்.

பல நெளிவுகளால் அழகுபடுத்தப்பட்ட அலுமினியக் கோப்பையில் சுடச்சுட கொத்துரொட்டியை போட்டுத் தருவார். ஆவலுடன் ருசித்து ருசித்தசாப்பிடுவேன். அந்த ருசி இன்னும் நாக்கில் நிலைத்து நிற்கிறது.

**ஏலையா க.முருகதாசன்**




நேர வித்தியாசம் காரணமாக உலகிலேயே ஐ போன் 6S மற்றும் ஐ போன் 6S பிளஸ் ஆகியவை முதலில் விற்பனையாகும் நாடு என்ற பெருமையை அவுஸ்திரேலியா பெறுகின்றது.நேற்று (25.09.2015) சிட்னியில் ஐ போன்களை வாங்குவதற்காக நின்ற பெருந் தொகையானவர்கள் மத்தியில் ஒரு ரோபோவும் நின்றது பலரின் கவனத்தை யும் ஈர்த்துள்ளது. ஐ பாட் ஒன்றுடன் இணைக்கப்பட்டு றிமோற் மூலம் இயங்கும் இந்த லூசி (Lucy Kelly) என்ற பெயர் கொண்ட ரோபோ, தனது உரிமையாளர் லூசி கெல்லி சார்பில் ஆப்பிள் ஸ்டோரிற்குச் சென்று தன்னுடன் இணைக்க பட்டிருந்த கிறடிற் கார்ட் மூலம் பணைத்தைச் செலுத்தி ஐ போன் 6S ஐ வாங்கியது. **-கே.எஸ்.சுதாகர்.**

## 5 வது பிறந்தநாள் வாழ்த்து




செல்வன் ஹரிஷான் தீபன் தாயகத்தில் புங்குடுதீவினைப் பிறப்பிடமாகவும் யோ்மனியில் சால்புறுக்கனை வதிவிடமாகவும் கொண்ட தீபன் பிரவீணா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஹரிஷான். தனது ஐந்தாவது பிறந்தநாளை 22.10.2015 கொண்டாடுகின்றார். இவரை அப்பா அம்மா அண்ணா கிருஷான் தங்கை கன்சிகா அப்பப்பா அப்பம்மா தாத்தா அம்மம்மா மாமாமார் மாமிமார் பெரியப்பாமார் பெரியம்மாமார் சித்தப்பா சித்தி மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



# கை தட்டுங்கள் நோய்கள் விலகி ஓடும்! பிறரைப் பாராட்டினால் இதயம் பலமாகும்!

நாம் எப்ப எப்ப கைதட்டுகின்றோம் என்று எண்ணிப்பாருங்கள். ஒன்று ஒருவரின் திறமையை அங்கீகரிக்கும்போது. பாராட்டும்போது, கலைகளால் கவர்ந்து நாமும் மகிழ்ந்து அதன் உச்சத்தைத்தொடும்போது. கண்ணுக்கு முன்னே நிழல் இல்லாமல் நிஜமா ஒரு கலை நிகழ்ச்சி மனதை தொடும்போது இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். பல குழந்தைகளுக்கு கை தட்டுவதென்றால் கொள்ளை பிரியமாக இருக்கும்.

ஒன்று மட்டும் நிஜம் தொலைக்காட்சியில் எம்மை எது கவர்ந்தாலும் நாம் கைதட்டமாட்டோம். காரணம் அந்த ஒலி அந்த கலைஞனை உடன் சென்று அடையாது என்பதனாலேயே. பாராட்டும் போது பிறரை உற்சாகப்படுத்தும் போதெல்லாம் இந்தக்கைகள் தட்டுகின்றன. அதற்கான ஆணையை மூளை வளங்குவதில்லை. இதயம் அதாவது உணர்வு அலைதான் அந்தக் கைகளை தட்டவைக்கின்றது.
இப்படித் தட்டுவதால் முதல் நன்மை இதயத்திற்குத்தானாம். இது ஆய்வுகளின் முடிவு. உலகிற்கும் உடலுக்கும் பாராட்டும் பண்பு எவ்வளவு ஆரோக்கியமானது பார்த்தீர்களா! நம் முன்னோர் சொன்னதையே இன்று ஆய்வுகள் கண்டுகொள்கின்றன.



தட்டங்கள் கைளைத் தட்டுங்கள் கவலைகள் பறந்தோடும். தட்டுங்கள் திறக்கப்படும். மனம் ஒளி பெறும்.

## கைகளை தட்டுவதால் கிடைக்கக்கூடிய நன்மைகள்!!!

கைகளை தட்டினால் ஆரோக்கியமாக இருக்கலாம் என்று சொல்லும் போது கேட்பதற்கு நகைச்சுவையாக இருக்கலாம். ஆனால் அது நூற்று நூறு உண்மை என்று அறியும் போது அது ஒரு நல்ல விஷயமாக அமைகிறது. காலையில் இசையை கேட்பதை விட இரண்டு கைகளை தட்டும் போது எழும் ஓசையை கேட்பது சிறந்ததாக கருதப்படுகிறது. சரி, கைகளை தட்டுவதால் கிடைக்கும் உடல்நல பயன்களைப் பற்றி இப்போது பார்க்கலாம்.

இதய நோய் கைகளை தட்டுவதால், இதய நோய்கள் மற்றும் ஆஸ்துமா சம்பந்த பிரச்சனைகளுக்கு பெரிய தீர்வு கிடைக்கும்.

நரம்புகள் சீராக செயல்படும் இதயம், மூளை, நுரையீரல், கல்லீரல் போன்ற உறுப்புகளுடன் நரம்புகள் இணைய இது பெரிதும் உதவும். கைகளை தட்டினால் நரம்புகள் சீராக செயல்படும்.

### மன அமைதி கிடைக்கும்

கைகளை தட்டினால் மன அமைதி கிட்டும்.

### நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்

இது உங்கள் உடலில் உள்ள குருதி வெள்ளையணுக்களை திடப்படுத்துவதால், உங்கள் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இதனால் எவ்வகையான நோய்களில் இருந்தும் உங்கள் உடலை இது பாதுகாக்கும்.

### ஆற்றல் திறன் அதிகரிக்கும்

குழந்தைகளின் ஆற்றல் திறனை அதிகரித்து அவர்களின் கல்வி சார்ந்த செயல் திறனை மேம்படுத்தும்.

### இரத்த ஓட்டம் அதிகரிக்கும்

கைகளை தட்டும் போது இரத்த ஓட்டம் ஊக்குவிக்கப்படும். அதனால் தமனி மற்றும் அசுத்த இரத்தக்குழாய்களில் உள்ள அடைப்புகள் அனைத்தும் நீங்கும். இதில் கெட்ட கொலஸ்ட்ரால் நீங்குவதும் அடங்கும்.

### கையெழுத்து அழகாகும்

குழந்தைகளுக்கு கைகளை தட்ட பயிற்சி அளித்தால், அவர்களின் இயக்க செயல் திறன்கள் மேம்படும். அதனால் அவர்களின் கையெழுத்து அழகாகும், சிறப்பாக எழுத வரும், எழுத்துப்பிழையும் குறையும்.

### நன்கு வியர்க்கும்

தினமும் உணவருந்திய பின் ஒரு மணி நேரத்திற்கு கைகளை தட்டுங்கள். அது வெப்பத்தை ஏற்படுத்தி கைகளிலும் கால்களிலும் வியர்க்க செய்யும்.

### ஈரப்பசை அதிகரிக்கும்

நல்ல பயனை பெற, கைகளை தட்டுவதற்கு முன், தேங்காய் எண்ணெய் அல்லது கடுகு எண்ணெயை உள்ளங்கையில் தடவிக் கொள்ளுங்கள். அதனால் அதனை உங்கள் உடல் உறிஞ்சி விடும்.

இதர உடல்நல பிரச்சனைகள் இதய நோய்கள், உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், மன அழுத்தம், ஆஸ்துமா, சளி, கீல்வாதம், தலைவலி, தூக்கமின்மை மற்றும் முடி கொட்டுதல் பிரச்சனைகளை கைகளை தட்டுவதால் சரி செய்யலாம்.











# ஒரே மேடையில் இருமலர்களின் பரத அரங்கேற்றம்




செல்விகள் றஜினா, தருமராஜா வேவிதா தருமராஜா அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் கலந்து சிறப்பித்து அவர் தம் பரதக்கலை அழகு கண்டு வியந்து "வெற்றிமணி வளர்கலை" விருது வழங்கி கௌரவித்தது.



யேர்மனி ஆடற்கலாலய அதிபர் ஆடற்கலைமணி திருமதி றெஜினி சத்தியகுமார் அவர்களின் மாணவியும் திரு.திருமதி தர்மராஜா தம்பதிகளின் புதல்விகளான செல்விகள் றஜினா, தருமராஜா வேவிதா தருமராஜா அவர்களின் பரதநாட்டிய அரங்கேறம் கடந்த 19.09.2015 சனிக்கிழமை யேர்மனியில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

பிரதமவிருந்தினராக பரதசூடாமணி து.தயாளசிங்கம் அவர்கள் கலந்து கொண்டார்.அவர் தன்னுரையில் ஒரு ஆண்மகன் நட்டுவாங்கம் செய்வது அதுவும் 17 வயதில் செய்வது அதிசயமாகவும் ஆனந்தமாகவும் உள்ளாதகக் குறிப்பிட்டு அரகேற்ற நாயகிகளது நடனத்தில் எந்த இடத்திலும் குறை சொல்லமுடியாத அளவிற்கு சிறப்பாக இருந்தது, அதே நேரம் பதம் தன்னை மிகவும் கவர்ந்தது என்றார்.

சிறப்பு விருந்தினர்களாக திரு.செ.லோகன், (தமிழ்க்கல்வி கழகப் பொறுப் பாளர்.) திரு.இரா.மனோகரன் (தமிழ் கல்விக்கழக கல்வி மற்றும், தமிழ்த்திறன் பொறுப்பாளர்). கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் (வெற்றிமணி பிரதம ஆசிரியர்) மற்றும் Pfarrer Albert Koolen , Steuerberaterin frau birgit toll ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.. தமிழ்க்கல்வி கழகப் பொறுப்பாளர் திரு.செ.லோகன் அவர்கள் இந்த நடமணிகளுக்கு உள்ள தமிழ் ஆர்வம் மற்றும் சேவை உள்ளம் இவற்றை பல சந்தர்பத்தில் தான் அவதானித்ததை அழகாக எடுத்துக்கூறினார். இன்று இந்த உயர்ந்த இடத்தைப் பிடித்திருக்கும் செல்வி றஜிதா பல கடினமான பொறுப்புக்களை பொறுப்புணர்வோடு செய்து முடித்தவர் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் குறிப்பிட்டார்.














குரு அரவிந்தன்

# அலை மோதும் காதலே..!

வெளியே பனி கொட்டிக் கொண்டிருந்தது. பனிப்புகாரில் பாதை தெளிவாகத் தெரியவில்லை. பனிமூட்டத்தில் போகிறபாதை தெளிவாகத் தெரியாவிட்டாலும் செல்லவேண்டிய இடத்தை அடைவதில் சுகி குறியாக இருந்தாள்.

மனசு தவிப்பதைவிட இந்தக் குளிரிலும் உடம்பு தகிப்பதே பெரிய வேதனையாக இருந்தது. எப்படியும் மனதில் இருப்பதை சுபாவிடம் கொட்டிவிட வேண்டும் என்ற ஆதங்கத்தோடுதான் அக்காவின் வீடு தேடி வந்திருந்தாள்.

'ஏன்டி இத்தனை நாளாய் ஊமையாய் இருந்தாய்?' சுபா தங்கையை அதட்டினாள்.
கட்டிலில் உட்கார்ந்திருந்த சுகி கண்களைத் துடைத்துக் கொண்டு அக்காவை நிமிர்ந்து பார்த்தாள்.
'எப்படி அக்கா இதை வெளியே சொல்லுறது?'
'இப்பமட்டும் என்னவாம், வெளிக்கிட்டு என்னோட வா, போவம்.'
'எங்கேயக்கா..?'
'டாக்டரிட்டைதான்!'
'வேண்டாமக்கா, நான் எங்கேயும் வரவில்லை.'
'குடும்ப வைத்தியரிட்டைப் போனியா?'
'போனேன்..!'
'என்னவாம்?'
'எல்லாம் செக் பண்ணிப் பாத்தாச்சு!' சுகி விம்மினாள்.
'என்ன சொன்னவர் எண்டு சொல்லிப்போட்டு அழேன்'
அவள் சற்று நேரம் மௌனம் காத்தாள். இதற்கு என்ன பதில் சொல்வது? எப்படிச் சொல்வது?
'உன்னிலை ஏதாவது பிழையா?' என்றாள் சுபா
அவள் பதில் சொல்லாமல் தலை குனிந்திருந்தாள்.
'பலோப்பின் குழாயில ஏதாவது தடையா..?.'
'இல்லை' என்று மறுத்தாள்
'கருப்பையில் ஏதாவது கோளாறா?'
அதற்கும் மறுத்தாள்.
'நல்ல ஆரோக்கியமாகத் தானே இருக்கிறாய், அப்போ என்னதான் பிரச்சனை என்று சொல்லித் தொலையேன்' சுபா பொறுமை இழந்து கத்தினாள்.

சுகியின் மௌனம் எதையோ சொல்லத் துடிப்பதுபோல இருந்தது.

'கொஞ்ச நாளாய் நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன், மனசுக்கை இப்படியே வைச்சுக் குமைஞ்சு கொண்டிருந்தால் உனக்குக் கெதியாய் டிப்பிரசன்தான் வரும், சொல்லிப்போட்டன்.' குரலை உயர்த்தி அதட்டினாள் சுபா.

தங்கையின் வீட்டில் என்னதான் நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத இயலாமையால் தங்கைமீது கோபப்பட்ட சுபா ஒரு கணம் நிதானித்துப் பொறுமை காத்தாள்.

சுகி எப்பொழுதுமே கொஞ்சம் தயக்கம் காட்டித்தான் எதையும் சொல்வாள். தன்னுடைய வார்த்தைகள் மற்றவர்களைப் பாதித்துவிடுமோ என்ற அச்சம் எப்பொழுதும் அவளிடம் இருந்தது. முள்ளிலே சிக்கிய சேலையின் நிலையில்தான் சுகி இருக்கிறாள் என்பதால் கவனமாகச் செயற்பட வேண்டும், அவசரப்பட்டால் எல்லாமே மறைக்கப்பட்டு விடலாம். எனவே கோபப்படாமல் நிதானமாகத்தான் அவளிடம் கேட்டு அறிந்து கொள்ளவேண்டும் என்று முடிவெடுத்தாள்.

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் ஏற்படும் பிரச்சனைகளில் பாலியல் சிக்கல்களும் முக்கிய காரணமாகிறது என்பதை சுபா அறிந்து வைத்திருந்தாள். பொதுவாக பெரும்பாலான பாலியல் பிரச்சனைகள் மனம் சார்ந்ததாகவே இருந்தாலும், உடல் ரீதியான காரணங்களும் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றன. ஏனென்றால் இந்தப் பிரச்சனை ஆண் பெண் என்ற வேறுபாடில்லாமல் இருபாலரையும் பாதிக்கிறது. என்னதான் நாகரிகத்தில் முன்நின்றாலும், இன்றுள்ள சமூக அமைப்பு உளம் சார்ந்த நோய்கள் பற்றிப் பிறரிடம் பேசுவதையே தவறாக எண்ணுகிறது. சுபாவும் இங்கேயே படித்தவள் என்பதால் இதைப் புரிந்து கொண்டு தங்கையின் விடயத்தில் சூழ்நிலைக்கேற்ப ஒரு மனநல ஆலோசகர் போலச் செயற்பட்டாள்.

சுகியும் இந்த மண்ணிலே வளர்ந்து படித்தவள். பாலியல் விழிப்புணர்வு உள்ளவள் என்பதால் சுபா தங்கையிடம் தயங்காமல் கேட்டாள்.

'சரி, இது ஒன்றுமே இல்லை என்றால்..? நான் ஒன்று கேட்கட்டா?'
'என்ன?'
'கோபிக்கமாட்டியே?'
'இல்லை, கேளக்கா!'
'அப்போ அவனிலை ஏதாவது பிழையா?'
அதிர்ந்து போனவள்போல சட்டென்று சுபாவை நிமிர்ந்து பார்த்தாள் சுகி.
'அ.. க்.. கா...!' கலங்கிய அவளது கண் முன்னால் கூப்பிய கரங்கள் ஊஞ்சலாடின.

அன்று இப்படித்தானே கூப்பிய என் கைகளைப் பிடித்துக் கொண்டு அன்று அவன் கோபப்பட்டான்.
'சொன்னால் கேட்கமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாய் சுகி, இப்ப எப்படிப் பழகுகிறோமோ அதேபோல நாங்கள் நல்ல நண்பர்களாய்ப் பழகுவோமே'
'அப்போ நீ என்னை ஏமாத்தப் பாக்கிறியா?'
'உன்னை ஏமாத்தக் கூடாது என்ற படியால்தான் இந்தக் கலியாணமே வேண்டாம் என்று சொல்லுறேன்.'
'நீ சுகமாய் சொல்லிவிடுவாய் பாதிக்கப்படப் போவது நானல்லவா'
'இல்லை சுகி, கலியாணம் பேசுகினம் என்று சொன்னியே, உனக்குப் பொருத்தமானவனைத்தான் அப்பா தெரிந்தெடுத்திருப்பார். அதையேன் நீ மறுக்கிறாய்?'
'அப்பா அம்மா தங்கட கடமையைச் செய்யினம், கலியாணம் கட்டப்போறது நான்தானே'
'அவனை உனக்குப் பிடிச்சிருந்தால் கட்டிக்கோ'
'என்ன சொல்லுறாய்? ஜோக்கா?'
'இல்லை உண்மையாத்தான் சொல்லுறேன்'
'அப்போ நாங்க பழகினதெல்லாம்?'
'என்ன சுகி இப்படிச் சொல்லுறாய். எங்களுக்குள்ள இருந்த உறவு நட்பு மட்டும்தான், ஜஸ்ட் ஏ பிறன்ட்ஷிப் அவ்வளவுதான்'
'அப்போ காதலர் தினத்திலன்று ஒற்றை ரோஜா கொண்டு வந்து என்னிடம் நீட்டினாயே, மறந்திட்டியா?'
'ஆமா அது நட்பின் அடையாளமாகத் தான் நீட்டினேன். நீதான் அதைத் தப்பாய் எடுத்திட்டாய்.'
'போதும் இப்படி சொல்லி என்னை ஏமாத்தி விடலாம் என்று நினைக்கிறியா?'

'இந்த மண்ணில் எல்லாரும் கொஞ்சம் நெருங்கித்தான் பழகுவினம். பள்ளிகூடத்தில, வேலை செய்யிற இடத்தில அதுக்காக அவையைத்தான் கலியாணம் கட்டவேணும் எண்டில்லை.'

சுகிக்குக் கோபம் பொத்திக் கொண்டு வந்தது.
'சுகி பிளீஸ், நான் சொல்லுறதைக் கொஞ்சம் கவனமாய் கேள், என்னால உன்னைத்...!'

தொடர்ச்சி 18ம் பக்கம்...








# கொக்கோலா குடித்த 60 நிமிடங்களில் உடலில் ஏற்படும் மாற்றங்கள்

இலங்கையர்கள் மட்டுமின்றி உலகம் முழுவதும் பரவலாக அனைவராலும் விரும்பி பருகப்படும் குளிர்பானமான கோக்க கோலாவை குடித்த 60 நிமிடங்களில் நமது உடலில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன? என்பதை அறிந்து கொள்வோம்.

ஆபத்தான மாற்றங்கள் நமக்கு தெரியாமலேயே நிகழ்வதாக பல காலமாக கூறப்பட்டு வந்தாலும், 'கோக்' மீது அதன் அபிமானிகள் கொண்டுள்ள மோகமானது, இந்த எச்சரிக்கைகளை எல்லாம் புறம்தள்ளி வைக்க தூண்டுகிறது. கோக்க கோலா மட்டுமன்றி சர்க்கரையுடன், கேபைன் எனப்படும் மூலப்பொருளும் கலந்த பானங்களை நாம் பருகும்போது..

## முதல் பத்து நிமிடம்:

நமது இரத்த மண்டலத்தில் பத்து தேக்கரண்டி அளவிலான சர்க்கரை ஒரே நேரத்தில் பாய்கிறது. (இது ஒருநாள் முழுவதும் ஒரு மனிதன் உட்கொள்ளக் கூடிய அதிகபட்ச சர்க்கரையின் அளவாகும்) இதன் விளைவாக, குமட்டல் வரக்கூடும். ஆனால், கொக்க கோலாவில் உள்ள 'பாஸ்பரிக் ஆஸிட்' இந்த குமட்டல் அறிகுறியை அடக்கி விடுகிறது.

## இருபதாவது நிமிடம்:

உங்கள் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு பல மடங்காகக் கூடுகிறது. இதன் விளைவாக, இன்சுலின் சுரப்பி அமோக உற்பத்தியை தொடங்கி விடுகிறது. இதையடுத்து, கிடைக்கக்கூடிய சர்க்கரையை எல்லாம் நமது கல்லீரல் கொழுப்பாக மாற்றி, உடலுக்குள் தேக்கி வைத்து கொள்கிறது.

## நாற்பதாவது நிமிடம்:

கேபைன் எனப்படும் வேதியல் கரைசலை நமது உடல் முழுமையாக உள்வாங்கிக் கொள்கிறது. கண் விழிகள் விரிவடைகின்றன. இதை ஈடுசெய்ய அதிகமான சர்க்கரையை நமது கல்லீரல் இரத்தத்துக்கு அனுப்புகிறது. இந்த நிலையில் சோர்வை உணர்ந்துக் கொள்ளக் கூடிய மூளையின் உணர்வுப் பகுதி தற்காலிகமாக தடைக்குள்ளாகின்றது.

## நாற்பத்தைந்தாவது நிமிடம்:

நமக்கு ஊக்கத்தையும், பேரின்பத்தையும் ஏற்படுத்தவல்ல மூளையின் மண்டலம் சுறுசுறுப்படைகிறது. இது 'ஹெராயின்' போதைப்பொருள் உபயோகிப்பவர்களுக்கு கிடைக்கும் ஊக்கம் மற்றும் சுறுசுறுப்புக்கு இணையானதாக கருதப்படுகிறது.


## அறுபதாவது நிமிடம்:

இதில் உள்ள 'பாஸ்பரிக் ஆஸிட்' கால்சியம், மேக்னீசியம் மற்றும் துத்தநாக சத்துகள் நமது சிறுகுடலை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. இதன் விளைவாக இரத்த ஓட்டம் கூடுகிறது. சிறுநீர் கழித்தே தீர வேண்டிய கட்டாய உணர்வு ஏற்படுவதுடன், சிறுநீர் வழியாக உடலில் உள்ள கால்சியம் சத்தும் வெளியேறி விடுகிறது.

கட்டாயமாக சிறுநீர் கழிப்பதன் வாயிலாக நமது எலும்புகள் சக்திபெற ஏற்கனவே தேக்கி வைக்கப்பட்ட கால்சியம், மேக்னீசியம், துத்தநாகம் மற்றும் சோர்வுத்தன்மையை நீக்கும் 'எலக்ட்ரோலைட்' திரவம்,நீர் ஆகிய சத்துகள் சிறுநீர் வழியாக வெளியேறி விடுகின்றன.

இவை யாவும் வெளியேறிய பின்னர், மீண்டும் சர்க்கரைக்காக உங்கள் இரத்தம் ஏங்கத் தொடங்கும். இனி இரத்தம் இனிப்புக்காக இரங்கும்!

எரிச்சல், களைப்பு ஆகியவை தோன்றி மீண்டும் இதைப்போன்ற குளிர்பானங்களை நாட வேண்டிய உந்துதலுக்கு ஆளாக்கப்படுகிறோம் என சமீபத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.




## நன்றி நவில்கின்றோம்



யேர்மனியில்
14.06.2015 நடைபெற்ற
எங்கள் திருமணத்திலும்
விருந்துபசாரத்திலும்
கலந்து சிறப்பித்து
எம்மை வாழ்த்திய
அன்பு உள்ளங்களுக்கு
எங்கள் இதயம்
கனிந்த நன்றிகள்.
அன்புடன்
ரஜீவ் .ஹேமமாலினி

மணமகன் பெற்றோர்: திரு.திருமதி.கு.சின்னத்துரை பிள்ளையம்மா
London (தாயகம் உரும்பிராய் இலங்கை)
மணமகன் பெற்றோர்: திரு திருமதி க.மகாலிங்கம் மகாராணி
Germany (தாயகம் புங்குடுதீவு இலங்கை)
Tel: (Germany) 0176 700 73 650



# கொலஸ்டரோல் சிகிச்சையில் புதிய அணுகுமுறைகள்!






டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

“பாருங்கோ டாக்டர் என்ரை கொலஸ்டரோல் அளவு எவ்வளவு குறைஞ்சுபோட்டுதெண்டு. ஆனால் குளிசையின் அளவைக் குறைக்கவோ நிப்பாட்டவோவேண்டாம் என்று ஸ்பெசலிஸ்ட் சொல்லுறார்” ரிப்போட்டை நீட்டியபடி சொன்னார்.

நான் அவரது கேள்விக்கு நேரடி மறுமொழி சொல்லவில்லை. எதிர்க் கேள்வி கேட்டேன்.“நீங்கள் ஏன் கொலஸ்டரோல் மருந்து பாவிக்கிறனீங்கள்”என்றும் தெரியாத அடிமடையன் ஒருவனைப் போல என்னைப் பார்த்துக் கொண்டு“வேறை என்னத்துக்கு இரத்தத்திலை கொலஸ்டரோல் அளவைக் குறைக்கத்தான். இப்ப அளவு குறைஞ்சு போட்டுது மருந்தைக் குறைக்கலாம்தானே.” என்றார்.

'உங்களுக்கு ஹாட் அட்டாக் அல்லது பக்கவாதம் எதிர்காலத்தில் வரவேண்டும் எனவிரும்பினால் மருந்தை நிப்பாட்டுங்கோ' என்று முகத்தில் அடிக்குமாற்போலச் சொல்லி அவரது மனத்தை நோகடிக்க விரும்பவில்லை. மாரடைப்பு பக்கவாத பாதிப்புகள் அவர் எண்ணுவதுபோல வெளிப்படையான காரணம் குருதிக் கொலஸ்டரோல் அளவைக் குறைப்பதுதான் என்ற போதும் அடிப்படைக் காரணம் வேறு ஆகும்.

காரணத்தை விளக்கினேன். இன்று மனிதர்களை மரண வாயிலில் தள்ளுவதில் முன்நிற்பவை மாரடைப்பும் பக்க வாதமும் ஆகும். இவை இரண்டும் வருவதற்கு முக்கியகாரணம் இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிந்து அவை அடைபடுவதுதான். இரத்தக்குழாய்களில் கொழுப்பு படிவது கொலஸ்டரோல் அதிகரிப்பதால் ஆகும்.

இருந்தபோதும் மாரடைப்பு பக்கவாதம் ஆகியன வருவதற்கு குருதியில் அதிகரித்தகொலஸ்டரோல் மட்டும் காரணம் அல்ல. ஒருவரது வயது என்ன என்பது ஒரு முக்கியகாரணமாகும். வயது அதிகரிக்க அதிகரிக்க மேற்கூறிய பாதிப்புகளுக்கான சாத்தியங்கள் அதிகமாகும். உலகின் எந்தப் பகுதியைச் சார்ந்தவர் என்பது மற்றொரு காரணமாகும்.

வெள்ளையனா, ஆபிரிக்கனா, ஆசியனா என்பது முக்கியமாகும். இதற்குக் காரணம் உங்களையும் என்னையும் போன்ற ஆசிய நாட்டவர்களுக்கு மாரடைப்பு பக்கவாதம் போன்ற நோய்ப் பாதிப்பு வருவது அதிகமாகும். புகைப்பவர்களுக்கு புகைக்காதவர்களைவிட இவை வரும் சாத்தியம் மிக அதிகமாகும்.

இவற்றைத் தவிர நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மாரடைப்பு மற்றும் பக்கவாதம் வருவதற்கான சாத்தியம் ஏனையவர்களை விட அதிகமாகும்.

பாதிப்பு வரக்கூடுமா என்பதை முற்கணித்தல் மேற்கூறிய காரணிகளை எல்லாம் மொத்தமாகக் கணக்கில் எடுத்து ஒருவருக்கு எதிர்காலத்தில் மேற்கூறிய பாதிப்புகள் வருவதற்கான சாத்தியம் எவ்வளவு (ASCVD Risk) என்பதை முன்னதாகவே கணக்கெடுக்க முடியும். அதற்கு ஏற்பவேகொலஸ்டரோல் மருந்தைக் கொடுக்க வேண்டும் என அமெரிக்காவில் உள்ள மருத்துவக் கழகங்கள் பொதுவான பரிந்துரை செய்துள்ளன. ஆபத்தை இலகுவாகக் கணிப்பதற்கான ஒரு கல்குலேட்டரை உருவாக்கி மருத்துவர்களின் பாவனைக்காக இணையத்தில் கிடைக்க வசதி செய்து தந்துள்ளார்கள்.

ASCVD Risk calculator என்பதே அது.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் குருதியில் கொலஸ்டரோலின் அளவுஎவ்வளவாக இருக்கிறது என்பதை விட ஒருவருக்கு மாரடைப்பு பக்கவாதம் மற்றும் காலிலுள்ள குருதிக் கலங்கள் அடைபடாமல் தடுப்பதற்கு மருந்து தேவைப்படுமா என்பதையும் எவ்வளவு மருந்து தேவைப்படும் என்பதையும் கவனத்தில் கொள்கிறார்கள்.

கொலஸ்டரோலுக்கு அதிகம் உபயோகிக்கும் மருந்துகளான ஸ்டரின் வகை மருந்துகள்பற்றிய ஒரு முக்கிய விடயத்தைக் குறிப்பிட வேண்டும். இவை பாதிப்பை ஏற்படுத்தும் எனப் பலர் தவறாகக் கருதுவதற்கு மாறாக மிகவும் பாதுகாப்பான மருந்துகளாகும் அவை.

Rosuvastatin, Atrovastatin, Simvastatin போன்ற ஸ்டரின் வகை மருந்துகள் ஒருவரது குருதியில் உள்ள கொலஸ்டரோல் அளவைக் குறைப்பதற்காகப் பொதுவாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த மருந்துகள் அதற்கு அப்பாலும் செயற்படுகின்றன. அவை குருதிக் குழாயில் ஏற்கனவே படிந்துள்ள கொழுப்பையும் (Atheroma) படிப்படியாகக் கரையச் செய்யக் கூடியவையாகும்., இதைப் பலர் உணர்ந்து கொள்ளாததாலேயே தாங்களாகவே மருந்தின் அளவைக் குறைப்பது அல்லது நிறுத்துவது போன்ற தவறைச் செய்கிறார்கள்.

ஸ்டரின் வகை மருந்துகளைத் தொடர்ந்து உபயோகித்து வரும்போது இரத்தக் குழாய்களில் உள்ள அடைப்பு படிப்படியாக் கரைந்து வரும். இதனால் குருதிச்சுற்றோட்டம் சீரடையும்.

“சமுதாய ரீதியில் பார்க்கும்போது லட்சக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடியும். மக்களை நீண்ட காலத்துக்கு நோயின்றி நலமாக வாழ வைக்க முடியும்”என மருத்துவ நிபுணர்கள் கருத்துரைக்கிறார்கள். பலவகைப்பட்டவர்கள் இதன் மூலம் பயனடைய முடியும்.

40 முதல் 75 வயது வந்தவர்களிடையே மேற்படி கல்குலேட்டர்கள் மூலம் கணிக்கும் போது அவர்களுக்கு அடுத்த பத்து வருடகாலத்துக்குள் பக்கவாதம் மாரடைப்பு போன்றவை வருவற்கான சாத்தியம் 7.5 அல்லது அதற்கு மேல் எனில் மருந்து அவசியமாகும்.

ஏற்கனவே மாரடைப்பு வந்தவர்கள், அதற்கான பைபாஸ் சத்திரசிகிச்சை அல்லது ஸ்டென்ட் வைக்கப்பட்டவர்களுக்கும் அவசியமாகும். அத்துடன் வழமையான நாளாந்த செயற்பாடுகளின் போது இருதயத்திற்கு குருதி செல்வது போதாத நோய்களான stable or unstable angina, transientischemic attack உள்ளவர்களுக்கும் மிக அவசியமாகும். வயது குறைந்தவர்களிலும் நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு அவசியமாகும்.

21 வயதுக்கு மேற்பட்ட எவருக்கும் கெட்ட கொலஸ்டரோலான LDLன் அளவு 190ற்கு மேற்பட்டால் statin மருந்து அவசியமாகும் என புதியவழிகாட்டல் சொல்கிறது. 40 முதல் 75 வயதான நீரிழிவு நோயுள்ள அனைவருக்கும் Statin மருந்து அவசியம் தேவைப்படும்.

மேற்குறிப்பிட்டவர்களுக்கு மட்டுமின்றி எதிர்காலத்தில் பாதிப்புகள் ஏற்படக் கூடும் என மருத்துவர்கள் கணிப்பீடு செய்யும் இன்னும் பலருக்கும் இந்த ஸ்டரின் மருந்துகளைக் கொடுக்க வேண்டும் எனச் சிபார்சு செய்கிறார்கள்.

தொடர்ச்சி 10ம் பக்கம்...




T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd







## அப்போ உங்களுக்கு ஒரு 18 அல்லது 20 வது இருக்கமா?

சிவாஜி கணேசனின் காதல் காவியம் வசந்த மாளிகை தமிழ் சினிமாவுக்கு மட்டுமல்ல. சிவாஜி கணேசனின் திரை வரலாற்றிலும் மிக முக்கியமான படம். இன்று பார்த்தாலும் திகட்டாத காதல் காவியம். சோகம், ரொமான்ஸ் என அனைத்தும் சரிவர கலந்த சகாப்தப் படம்.

வசூல் சாதனை வசந்த மாளிகை 1972ம் ஆண்டு செப்டம்பர் 29ம் தேதி ரிலீஸானது. தமிழகம் மட்டுமல்லாமல் இலங்கையிலும் யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டர் மற்றும் கொழும்பு திருமலை எங்கும் இப்படம் மிகப் பெரிய வெற்றிகண்டு வெள்ளிவிழா கண்டது. அரங்கு நிறைந்த காட்சிகளாக அடித்து ஓடிய அசகாய படம் வசந்தமாளிகை.

ஒரு கிண்ணத்தை ஏந்துகிறேன் பாடல் வரும் போது தியேட்டர் அதிரும். சிவாஜியின் ஆட்டமும் ஸ்ரைலும் கலக்கல். எங்கே அந்த நடிப்புப் பெட்டகம் என இன்றும் மலைக்கவைக்கும் கலைமகன் சிவாஜி.

நடிப்பில் பலத்த போட்டி சிவாஜி கணேசன் மட்டுமல்லாமல் வாணிஸ்ரீ, பாலாஜி, சுகுமாரி, நாகேஷ் என அத்தனை பேருமே இப்படத்தில் போட்டி போட்டு நடித்திருப்பார்கள்.

**அதில் சிவாஜி கணேசனின் நடிப்பு இன்றளவும் காதல் தோல்வி யடைந்தவர்களாக நடிப்பவர்களுக்கு பாடமாக அமைந்துள்ளது.(குடிமகனே பெரும் குடிமகனே)**

மயக்கும் இசை தந்த கே.வி.மகாதேவனின் இசையில் மயக்கம் என்ன இந்த மௌனம் என்ன, ஒரு கிண்ணத்தை ஏந்துகிறேன், குடிமகனே பெருங்குடிமகனே உள்ளிட்ட சூப்பர் ஹிட் பாடல்கள் அன்று பட்டி தொட்டியெங்கும் பட்டையைக் கிளப்பியது. சிவாஜியின் நடிப்பை இன்றும் அன்றும் ஓவர் நடிப்பு என்று சொல்பவர்கள் உண்டு. நாடகத்தில் தமது உணர்வைக்காட்ட மிகைப்படுத்தி நடிக்கவேண்டும். நாடகத்தில் திரைப்படத்தைப் போல் சூம்பண்ணி கிட்டக்காட்ட முடியாது. எனவே எங்கிருந்து வந்தார்களளோ அதன் பாணி இருக்கவே செய்யும். அன்று பெரும்பாலான இரசிகர்கள் அதனை ஏற்றும் கொண்டார்கள். மெதுவாக சவனம்பேசி நடித்தால் இப்படத்தில் சிவாஜி நடிக்கவே இல்லை என்று குறைசொல்வதாக சிவாஜியே ஒரு முறை சொல்லி இருந்தார். நான் நானாகவே இருப்பேன்.

என்னிடம் எது உள்ளதோ அதனை எடுக்க அன்று இயக்குனர்கள் பலர் இருந்தார்கள். காலப்போக்கில் இரசனைக்கு ஏற்ப முதல்மரியாதை படமும் வந்தது. மனோகரா வீரபாண்டிய கட்டப் பொம்மன் நடித்த சிவாஜி தேவர்மகன் படத்தில் மென்மையாக நடித்தார். வசனம் இன்றி ஊமையாகவும் நடித்து பெயர் பெற்றார். இப்போ எங்கே இந்தப் பொக்கிஷம்.

09 பக்கத் தொடர்ச்சி

## கொலஸ்டரோல் சிகிச்சையில் ....

கெட்ட கொலஸ்டரோலான LDL ன் அளவை 50% ற்கு அதிகமாகக் குறைக்க வேண்டியவர்களுக்கு Rosuvastatin 20- 40mg,Atrovastatin20- 40mg கொடுக்க வேண்டும் எனச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. LDLன் அளவை 30 வீதம் முதல் 50 வீதம் மட்டுமேகுறைக்க வேண்யவர்களுக்கு Rosuvastatin 5- 10mg, Atrovastatin 10- 20mg,Simvastatin 20- 40mg கொடுக்க வேண்டும் எனச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. LDLன் அளவை 30 வீதத்துக்கு மட்டுமே குறைக்க வேண்யவர்களுக்கு Simvastatin 10mg மட்டுமே போதுமானதாகும்.

ஸ்டரின் மருந்துகளை மேற்கூறிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப ஆரம்பித்த பின்னர் மூன்று மாத்துக்கு ஒரு முறை 6 மாதத்துக்குஒரு முறை எனக் குருதிப் பரிசோதனைசெய்து அதற்கேற்ப மருந்துகளின் அளவைமாற்ற வேண்டியதில்லை. முதலில் கணித்தமருந்தின் அளவைத் தொடர வேண்டும். அவ்வாறு தொடர்வதால்தான் எதிர்கால ஆபத்துகளைத் தவிர்க்க முடியும் என்பதை, இங்கு வலியுறுத்தி சொல்ல வேண்டியுள்ளது.

குருதியில் கொலஸ்டரோல் அளவு மிகஅதிகமாக இருந்தால் இந்த ஸ்டரின்மருந்துகளுடன் கொலஸ்டரோலைக் குறைக்கும் Fibrates, Niacin போன்ற வேறு பல மருந்துகளையும் மருத்துவர்கள் இதுவரை கொடுத்து வந்துள்ளார்கள்.

கொலஸ்டரோல் அளவைக் குறைப்பதற்காக அவ்வாறு இரண்டாவது மூன்றாவது மருந்துகளை சேர்ப்பதால் பயனில்லை எனப் புதிய வழிகாட்டல் சொல்கிறது.

ஸ்டரின் மருந்துகள் மட்டும் எதிர்கால ஆபத்துகளைத் தடுக்க முடியுமா?

நிச்சயமாக இல்லை.

**நலமான வாழ்க்கை முறை**

எமது வாழ்க்கை முறை சரியானதாக இருக்க வேண்டும். நலவியல் ரீதியாக சிறந்த வாழ்க்கை முறை என்பது என்ன? ரீவி அல்லது கணினி முன் பெருமளவு நேரம் இருந்து கொண்டு நொட்டு நொறுக்குத் தீனிகளை கொறிப்பதையே இன்று பெரும்பாலானவர்கள் செய்கிறார்கள்.

முறையான உடல் உழைப்போ ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களோ பெரும்பாலனவர்களிடம் இல்லை. நார்ப்பொருள் அதிகமுள்ள தானியங்கள் காய்கறிகள் பழவகைகளை அதிகம் உணவில் சேர்க்க வேண்டும்.

கொழுப்பு

வகைகள் மற்றும் பொரித்த உணவுகளைக் குறைக்க வேண்டும். மென்பானங்கள் போன்றவற்றையும் அதிகம் பாவிக்கக் கூடாது. தினசரி உடற் பயிற்சி செய்ய வேண்டும். அல்லது உடல் உழைப்பில் ஈடுபட வேண்டும். எடையை அதிகரிக்கவிடக் கூடாது. புகைத்தலைத் தவிர்க்கவேண்டும்.

நன்றி: தமிழர்தகவல்-கனடா







# இன்முகம் காட்டி வரவேற்கும் யேர்மன் காவலர்கள்!

## யேர்மன் அதிபருடன் அகதிகள் செல்பி!



### டோட்மூண்ட் நகரில் உணவும் உடையும் கொடுத்து வரவேற்றனர்!

ஜேர்மனிய அதிபர் அஞ்ஜெலா மெர் கெல் குடியேற்றவாசிகளுக்கு நாட்டின் எல்லைகளைத் திறந்து வைத்ததன் மூலம் அபாயகரமான சூழ்நிலையொன்றை. உருவாக்கியுள்ளதாக அவரது எதிர்ப்பாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

புகலிடம் தொடர்பான விதிகளைத் தளர்த்துவதற்கு ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையொன்றையடுத்து கடந்தமதம் முதல் வார இறுதியில் சுமார் 18,000 குடியேற்றவாசிகள் ஜேர்மனிக்குள் பிரவேசித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறு அவசரகால நிலைமையின் கீழ் புகலிட விதிகள் தளர்த்தப்பட்டுள்ளதை முடிவுக்குக் கொண்டு வர வேண்டியுள்ளதாக ஆஸ்திரிய அதிபர் வெர்னர் பேமான் தெரிவித்தார்.குடியேற்றவாசிகள் தொடர்பான நிலைமை படிப்படியாக வழமைக்குக் கொண்டு வரப்படும் என அவர் கூறினார்.

ஜேர்மனிய அதிபர் அஞ்ஜெலா மெர் கெல் மற்றும் ஹங்கேரிய பிரதமர் விக்டர் ஒர்பான் ஆகியோருடன் தொலைபேசியில் உரையாடியதையடுத்தே அவர் இவ்வாறு கூறினார்.ஹங்கேரி இதற்கு முன் குடியேற்றவாசிகள் மேற்கு ஐரோப்பாவுக்குள் பிரவேசிப்பதற்கு தடை விதித்திருந்தது ஆனால் கடந்த மாதம் மேற்படி கட்டுப்பாடுகளை அந்நாடு கைவிட்டிருந்தது.அதேசமயம் சேர்பியாவுடனான ஹங்கேரிய எல்லையில் தடுப்பு வேலியொன்றை நிர்மாணிக்கும் பணி தொடர்ந்து வருகிறது.

ஜேர்மனிய அதிபர் அஞ்ஜெலா மெர்கெலின் கூட்டமைப்பைச் சேர்ந்த இரு கட்சிகள் ஞாயிற்றுக்கிழமை 06.09.2015 இரவு பேச்சுவார்த்தைகளை நடத்தியதையடுத்து மேலதிக நிதி தொடர்பான அறிவிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் ஜேர்மனிய அரசாங்கம் குடியேற்றவாசிகள் தொடர்பில் மாநிலங்களுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் 3 பில்லியன் யூரோவையும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் உதவிக் கொடுப்பனவுகளுக்காக மேலும் 3 பில்லியன் யூரோவை வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளது.ஜேர்மனி இந்த வருடத்தில் 800,000 அகதிகளையும் குடி யேற்றவாசிகளையும் ஏற்க எதிர்பார்த்துள்ளது.

இந்நிலையில் ஜேர்மனிக்குள் தற்போது புதிதாக விஜயம் செய்துள்ள குடியேற்றவாசிகளுக்கு அந்நாட்டு மக்களால் மகிழ்ச்சியுடன் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. எனினும்புகலிடக்கோரிக்கையாளர்கள் தங்கவைக்கப் பட்டிருந்த இரு நிலையங்களுக்கு எதிர்ப்பாளர்களால் கடந்தமாதம் இரவு தீ வைப்புகள் மேற்கொள்ளப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.இது அரசியல் நோக்குடைய தீவைப்பு சம்பவம் என பொலிஸார் நம்புகின்றனர்.

டோட்மூண்ட் நகரில் மட்டும் கடந்த திங்கள் (07.09.2015) 4000 முதல் 5000 வரை அகதிகள் பிரவேசித்தனர். இவர்களை வரவேற்று ஊண் உடையாவும் வழங்கப்பட்டது. அகதிகளாக வந்த பலர் தமக்கு என தயாரித்து வைக்பட்ட உணவை உண்பதற்கு பின்நின்றனர். காரணம் உணவு வைக்கப்பட்டு இருந்த விதம் விற்பனைக்குபோல் இருந்ததாம். அவை இலவசமாக அவர்களுக்கு அன்பாக வழங்கப்படுகிறது என்பதனை அறிந்தபின்னர் மகிழ்வுடன் உண்டனர். தண்ணீர் சிறுகுழந்தைகளுக்கான உடைகள் போத்தல் உணவுகள் என்பன அங்கு நிரப்பிவைக்கப்பட்டு இருந்தன. ஆல்பானியா சீரியா மற்றும் துருக்கி (குர்டன்) மக்கள் பலர் வந்து சேர்ந்தனர்.



**டோட்மூண்ட் நகரில் உணவும் உடையும் கொடுத்து வரவேற்றனர்!**

அவர்களின் தேவைகளை கவனிக்க அந்த அந்த நாட்டு மக்களின் தொண்டர்நிறுவன உறுப்பினர்கள் அங்கு ஆவலுடன் செயற்பட்டனர்.

டோட்மூண்ட் நகரில் (Leopld Str.58 அமைந்துள்ள Dietrich keuning Hause மண்டபத்திலேயே இந்த அகதிகளை அதிதிகளாக வரவேற்ற நிகழ்வு இடம்பெற்றது. மண்டபத்தைச் சுற்றி பொலீஸ் காவல் புரிந்தவண்ணம் இருந்தனர். அகதிகளுக்கு தொலைபேசி வைபை இலவச வசதியும் செய்து கொடுக்கப்பட்டு இருந்தது. காலத்திற்கேற்ற உதவி.

தொடர்ச்சி 23ம் பக்கம்









# ஒரு பிரதமர் படத்துடன் போலிக் கடவுச் சீட்டு!

## தொழில் நுட்பம் யார் பக்கம்?



கடவுச்சீட்டில் தலைமாத்தி வருதல் என்று ஒரு முறை அகதிகள் வாழ்வில் நீண்டகாலமாக இருக்கும் ஒரு முறை. அதனை அரசியல் அகதிகள் செய்துதான் ஆகவேண்டிய ஒரு நிலை இருந்தும் உள்ளது. சொந்த முகத்துடன் அகதியாக விமானநிலையத்தில் ஏறுவது கடினமானகாரியமே. அன்று தொழில் நுட்பவசதிகள் குறைந்த நேரத்தில் இந்த தலைமாற்றுதல் இலகுவாக இருந்து இருக்கலாம்.

ஆனால் இன்று தலைமாற்றதல் என்பது கடினமானகாரியம். துல்லியமாக கடவுச்சீட்டை அக்குவேறு ஆணிவேறாக பிரித்து மேயும் கட்டளைக் கணனி.

இந்த நேரத்தில் நெதர்லாந்து நாட்டில் வசிக்கும். சிரியா நாட்டை சேர்ந்த Harald Doornbos என்பவர் அங்கு Nieuwe Revu என்ற பத்திரிகையில் நிருபராக பணியாற்றி வருகிறார். இவர் சிரியா நாட்டில் எவ்வளவு இலகுவாக போலிக்கடவுச்சீட்டு எடுக்கலாம் என்பதனை நிரூபிக்க ஒரு கடவுச்சீட்டினை சிரியாவில் எடுத்துள்ளார்.

அதுவும் நொர்லாந்து நாட்டின் பிரதமரான மார்க் ரூட்டின் புகைப்படத்தையும் Malek Ramadan என்ற பெயரையும் கொடுத்துள்ளார்.

40 மணித்தியாலத்தில் கடவுச்சீட்டு தயார். ஒரு பிரதமரின் பெயரிலேயே கடவுச்சீட்டு பெறாம் என்றால் தீவிரவாதிகள் ஏன் எடுத்துக்கொண்டு ஐரோப்பாவிற்குள் நுழையமுடியாது என்ற கேள்விக்கு விடையாகவே இந்தப் போலிக் கடவுச்சீட்டை எடுத்துக் காட்டி உள்ளார். இந்தக் கடவுச் சீட்டு தயாரிக்க அவர்கொடுத்த விலை வெறும் 750 யூரோக்கள் மட்டுமே.

அதனை தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டு போலி கடவுச்சீட்டு பெறுவது எவ்வளவு எளிதானது என கூறியுள்ளார். தொழில் நுட்பம் இருபக்கமும் வளரும்.








கனகதுர்க்கா பூசாரி
பண்டித் சீனிவாஸ் சாஸ்திரி



கருமாரி அம்மன் துணை
Face Reading
முகத்தைப் பார்த்து உங்கள்
எதிர் காலத்தைக் கணிப்பார்
அத்துடன் கைரேகையும் பார்க்கப்படும்



வியாபாரங்கள் எதிரிகள் உடல்நிலை
வேலை குழந்தைப்பாக்கியம் திருமணம் பணம் காதல்
விவாகரத்து வழக்குகள் கண்திருஷ்டி படிப்பு
வாகனப்பொருத்தம் மற்றும் பலபிரச்சினைகளுக்கும்
தீர்வுகாணலாம். காத்துக்கறுப்பு இருந்தாலும் நிவாரணம்
செய்து கொடுக்கப்படும்
வாரத்தில் 7 நாட்களும் 09.மணி முதல் 22.00 மணி வரை வரலாம்.
பேசும் மொழிகள் :தமிழ் தெலுங்கு,
ஒரு முறை நம்பிக்கையுடன் வாருங்கள் நலமடைவீர்கள்.
Tel:0231 33 89 72 90 -Handy: 015166182886 015214145738
Adler Ster.30, 44137 Dortmund



A.tu.Z Dolmetscher -
und Übersetzungsdienst
Für alle weltsprachen
மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம். Lise-Meitner-Str.20
45144 Essen
e.mail:atuzuebersetzung@hotmail.com



அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை இன்று டோட்மூண்ட் நகரில் ஓர் நானா கடை!



Sweet Chilli
Original Srilankisches & Indisches Restaurant
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter
இலங்கை புரியாணி (ஒரிஜினால்) கொத்துரொட்டி, இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ் மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய உணவுவகைகள், அறுசுவை மரக்கறிகளுடன் தினமும் வாழையிலையில் பரிமாறும் ஒரே கடை நானா கடை!!! தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை



50 இருக்கைகளைக் கொண்டது
Sweet Chilli
சான்றிதழ்களை இருமுறை பெற்றவர்கள் நாம்!
Rheinische str.60- 44137 Dortmund
www.sweetchilli-do.de
Tel: 0231 315 46 84

3ம் பக்கத் தொடர்ச்சி ....

# ஜெ.ஆர் முதல் மகிந்தா வரை...

1983இல் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில் ஜே.ஆர் ஜயவர்த்த ஜனாதிபதியாக இருந்தபோது கூட இந்தியாவின் தமிழர்கள் குறித்த யோசனைகளை புறக்கணித்தார். 1988இல் பிரமதாச ஜனாதிபதியா இருந்தபோதும் இதே நிலைமைதான். ஆகவே மஹிந்த ராஜபக்ச மாத்திரம் சர்வதேசத்தை புறக்கணித்து செயற்பட்டார் என்று கூற முடியாது. ஆனால் போரை நடத்தி முடித்து அந்த போரை அழிக்கும்போது அவருக்கு சர்வதேச ஆதரவு தேவைப்பட்டது. ஜே.ஆர் ஜயவர்த்தன, பிரேமதாச, சந்திரிக்கா ஆகியோரும் பதவியில் இருந்தபோது புலிகளுடனான போரை நடத்த சர்வேத ஆதரவையும் இராணுவத்துக்கு தேவையான ஆயுதங்களையும் கொள்வனவு செய்திருந்தனர்.

ஆனால் இனப்பிரச்சினை தீர்வு அல்லது தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அநீதிகளை விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டால் மாத்திரம் அது உள்ளக விசாரணை என்றும் உள்ளூர் நீதிமன்றங்கள் மூலமாக அந்த விசாரணையை நடத்த முடியும் என்றும் கூறி தட்டிக்கழித்து விடுவார்கள். இந்த நிலைமைதான் 2015ஆம் ஆண்டும் தொடருகின்றது. ஆகவே மனித உரிமைச் சபை ஆணையாளரின் அறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் முற்று முழுதாக மறுத்திருப்பதன் அர்த்தம் என்ன? இறுதிப் போரில் இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை, பாலியல் வல்லுறவுகள் மற்றும் கடத்தல் காணாமல்பேதல் எதுவுமே நடைபெறவில்லை என்று ரணில் விக்கிரமசிங்க கூற முற்படுகின்றாரா? சதாரணமாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் முன்னாள் போராளிகள் கூட இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை.

## ரக்பி வீரரின் சடலம் எங்கே?

பாலியல் வல்லுறவுகள் மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகளை விசாரணை செய்ய கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் மற்றும் விசாரணை குழுக்கள் தமது அறிக்கையை கையளித்தபோதும் அவை கிடப்பில் போடபட்டுள்ளன. இந்த நிலையில் உள்ளக விசாரணையை எவ்வாறு தமிழ் மக்கள் நம்ப முடியும்? 1983இல் ஜே.ஆர் ஜயவர்தனாவில் இருந்து 2014ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருக்கும் வரையான காலப்பகுதிகளில் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகள், பாலியல் வல்லுறவுகள், மக்களின் பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் எவ்வாறான விசாரணைகளை நடத்தின? சந்திரிக்காவினால் 1998இல் நியமிக்கப்பட்ட ஆணை குழு ஒன்று தமக்கு விசாரணை நடத்த மேலும் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என கூறி கலைந்து சென்றது.


ஆகவே இந்த நிலையில் உள்ளக விசாரணைகளை மக்கள் எவ்வாறு நம்ப முடியும்? ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த வரலாறுகள் தெரியாதவை அல்ல. ஏன் அமெரிக்கா இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கும் இந்த உண்மை தெரியும். அப்படியிருந்தும் உள்ளக விசாரணைக்கு ஏன் ஆதரவு கொடுக்கின்றனர்? புலிகள் அழிக்கப்பட்ட வரலாற்றில் இந்த நாடுகளுக்கும் பங்களிப்பு உண்டு என்பது ஒன்று மற்றையது தமது அரசியல் பொருளாதார நிலை என்பதுதான் வெளிப்படையானது. அதேவேளை பிரபல ரக்பி வீரர் வசீம்தஜாதீன் கொலை செய்யப்பட்டமைக்கான ஆதரமாக அரச வைத்தியசாலையில் பொலிஸாரின் பாதுகாப்புடன் வைக்கப்படடிருந்த அவரின் உடற்பாகங்கள் காணமால்போயுள்ளன. இந்த நிலையில் உள்ளக விசாரணை எம்மாத்திரம்? வசீம்தஜாதீன் கொலைக்கு யார் காரணம் என்ற சந்தேகங்களும் எல்லோருக்கும் தெரியும். ஆகவே போர்க்குற்றம் பற்றிய உள்ளக விசாரணை யாரை பாதுகாக்கும்?

# மின்சாரப் பேரிகையே! எங்கே நம் இசைக் கலைஞர்கள்?





மின்சார பேரிகை



வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி வல்லிபுரக் கோவிலின் தேர்த்திருவிழா இன்று 26.09.2015 ஞாயிற்றக்கிழமை காலை இடம்பெற்றது..

வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ஆஞ்சநேயர் முன்னே வர விநாயப் பெருமான், மஹாலட்சுமி, சக்கரப் பெருமாள் ஆகியோர் உள் வீதியுலா வந்து தத்தம் தேர்களின் ஆராகணித்தனர். முற்பகல் 11 மணி தொடக்கம் 12 மணி வரை தேர்ப்பவனி இடம்பெற்றது.

.சுட்டெரிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது ஆயிரக்கணக்கான அடியவர்கள் தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டனர்..

நாளை பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று பிற்பகல் 5 மணியளவில் கற்கோவளம் கடற்கரையில் சமுத்திர தீர்த்தம் இடம்பெறவுள்ளது.

நெஞ்சைக் குடையும் ஒரு கேள்வி! இத்தனை மக்கள் ஒன்றுகூடும் இடத்தில் எத்தனை கலைஞர்கள் வாழும் தாய் மண்ணில் மின்சாரப் பேரிகை எதற்கு? மனிதன் வாசித்தால் வாசிப்பவர் மனதுக்கும் கேட்பவர் மனதுக்கும் பேரின்பம் அல்லவா? புலம்பெயர் நாட்டில்தான் நடக்குது என்றால் தாய்நாட்டிலுமா?

## நன்றி நவிலல்



யேர்மனியில் கடந்த 06.09.2015 நடைபெற்ற எங்கள் திருமணப் பதிவு நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்தியவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்

ரஜீவன்- மயூரி




Essen மாநகரில் Öffnungszeiten 14.00-19.00 Uhr

Oviyan textiles

ஒவியன் ஆடைகள் உலகம்

Tel:0201 330 99 464

அழகிய பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பெரியவர் சிறுமிகளுக்கான

அழகிய பஞ்சாபிகள்,இமிற்ரேசன் நகைகள் அனைத்தையும்

மலிவாகவும் தரமாகவும் பெற நாடுங்கள்,ஒவியன் ஆடைகள் உலகம்!

எசன் நகர பிரதான புகையிரத நிலையித்தில் (Hbf) இருந்து 5 நிமிட நடைத்தூரம்

Ihn.Balasundaram

Baedecker Str.11
45128 Essen

# Om Namaste

indisch/Sri-lankisches Restaurant

## இலங்கை உணவு

இல்லச் சுவை தரும் காரம் மணம் குணம் நிறைந்த உணவு!

- மீன்குழம்பு
- கோழி இறச்சி
- ஆட்டிறச்சி
- கணவாய்க்கறி
- கொத்துரொட்டி ,பிரியாணி
- இன்னும் பல

(இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட காரம் மணம் குணம் பொருந்திய சுவையான இலங்கை உணவு)

## Saturday Buffet

10.10.2015 சனிக்கிழமை முதல் ஆரம்பம்!

**Saturday Buffet 9,90€**

**all you can eat**





திங்கள் முதல் வெள்ளி வரை

**Indisches Buffet 6,90€**

**all you can eat**

மாட்டிறச்சி கோழியிறச்சி மற்றும் மரக்கறி, சலாட் பார் டெசேட் அனைத்தும் ருசிக்க 6.90 யூரோ மட்டுமே!



100% NATURAL

சுவையோ சுவை!

உங்கள் பிறந்தநாள், கொண்டாட்டம், பூப்புனிதநீராட்டு மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு உணவுடன் 100 இருக்கைகள் கொண்ட மண்டபம் இங்கு உண்டு



Offnungsziten
Mo-Do:11.00-24:00
Fr,Sa:11:00-03.00
So&Feiertage:
12:00-23:00




## Lieferservice

So-Do 12.00-23.00
Fr,Sa,12.00.02.00
Tel: 0231-334 85 282

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் 12.00 மணிமுதல் 21.00 மணி வரை

முழுமையான மரக்கறி உணவு

## Vegantag

Indisches Vegan Buffet 6,90€

all you can eat





**Party Service**
விபரம் அறிய அழையுங்கள்

Brückstrasse 31-33 44135 Dortmund / Germany Tel;0231 334 85 282

# ஆசிரியத் தாய் ஆயிலியம்.நாகலிங்கம்.

**வெகுமதியின் பெறுமதி**



புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மொழிசார்ந்த வளர்ச்சியில் பலரின் பங்களிப்பு இருப்பதனால்தான் புலம்பெயர் நாடுகளின் வேற்றுச் சூழ்நிலையிலும் தமிழ்மொழி நிலைத்து நிற்கின்றது.

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழுகின்ற ஜேர்மனியில் தமிழ்க் கல்விக் கழகத்தின் தமிழ்மொழி சார்ந்து ஏணியாக இளந்தலைமுறையினரை உயரக் கொண்டு சென்றதில் வரலாற்றுப் பதிவு உண்டு.

இந்தப் பணியை தனது வாழ்வாகவே கொண்டு பயணித்தவர் அமரர் திரு.இரா.நாகலிங்கம் ஐயா அவர்கள்.
அவருக்கு துணைவியாகவும் கல்விப் பணியில் உற்ற தோழியாகவும் கல்விக் கழகத்தின் பரீட்சைப் பிரிவுக்கு பொறுப்பாளராக பணி செய்த அமரர் திருமதி.ஆயிலியம் நாகலிங்கம் அவர்கள், தனது கணவருக்கு வெகுமதியாகக் கிடைத்த பெறுமதி எனச் சொல்வதில் எந்தத் தடையும் இல்லை.
ஒரு பொதுப்பணியில் கணவனும் மனைவியும் சமாந்தரமாகப் பயணிப்பது என்பது ஏறத்தாழ கண்டு கொள்ள முடியாதது. ஆனால் இவர்களிருவரின் வாழ்விலும் இதனைக் காண முடிந்தது.
மனைவிக்காக கணவனா, கணவனுக்காக மனைவியா என்பதை கண்டு கொள்ள முடியாத அளவிற்கு இக்கல்வியாளர்களின் பணி சிறந்து விளங்கியதை எல்லோரும் அறிவர்.
அறிவு என்பது கம்பீரமானது, அத்தகு கம்பீரத்தை தமக்குரியதாக வரித்துக் கொண்ட இத்தம்பதிகள் தோற்றத்திலும் நடையுடை பாவனையிலும் கம்பீரமானவர்கள்.



திருமதி. ஆயிலியம் நாகலிங்கம் அவர்கள் ஒரு விளையாட்டு வீராங்கனையுமாவார் என்பதை அறிய முடிகின்றது.

தமிழ்க் கல்விச் சமூகத்திற்கப்பால் திருமதி.ஆயிலியம் நாகலிங்கம் அவர்களை அறிவதற்குச் சாட்சியாக இருப்பவர் திரு.இரா. நாகலிங்கம் அவர்கள். எப்படியெனில் அவரின் பணிக்கு உற்றதுணையாக நின்றவர் அவரின் மனைவியே.



கல்விப்பணியில் அவ்வப்போது ஏற்படும் மன உழைச்சலை தனது கணவருக்கருகிருந்து ஆறுதல்படுத்தியவர் அவருக்குக் கிடைத்த மனைவி என்ற வெகுமதியே என்பதை சொல்லிக் கொள்வதில் எமக்கு மகிழ்வு உண்டு.
இவர்களின் கல்விப்பணியின் உன்னதம் அறிந்து வெற்றிமணியானது கல்விப்பணியில் சிறந்து விளங்கிய அதிபர் திரு.பொ.கனகசபாபதி (மகாஜனாக்கல்லூரி முன்னாள் அதிபர்) அவர்களின் கரத்தால் திரு நாகலிங்கம் ஐயா அவர்களுக்கு "நற்றமிழ்குருமணி" என்கின்ற பட்டத்தையும் திருமதி ஆயிலியம் நகாலிங்கம் அவர்களுக்கு ஆசிரியத்தாய் என்கின்ற பட்டத்தையும் வழங்கி மகிழ்ந்தது. (25.11.-2007)
திரு. திருமதி. நாகலிங்கம் ஆயிலியம் தம்பதிகள் ஜேர்மனியில் தமிழைத் தக்க வைத்தவர்கள் என்பதில் அவர்களிருவரும் வரலாற்றில் இடம் பெறுகிறார்கள்.

**ஏலையா க.முருகதாசன்**











# காதலியின் தோளில் கை போடலாமா ?

ஆண்கள் பெண்களின் தோளில் கை போடுவது ஆணாதிக்கத்தின் அறிகுறி என பிரபல நடிகை ஹெலன் மிரான் கொளுத்திப் போட்ட திரி ஆங்காங்கே பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.
மனித வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் ஆணாதிக்கத்தின் கூறுகள் எல்லா இடங்களிலும் பரவிக் கிடப்பதைப் பார்க்கலாம். சமூக அந்தஸ்து, கருத்து மரியாதை, பணியிட நிராகரிப்புகள், தலைமை மறுப்புகள், சமநிலையற்ற ஊதியம் என பெண்களுக்கு எதிரான நிலைப்பாடுகள் பல இடங்களில் இன்றும் தொடர்கின்றன.
பெண்களுக்கு சமூகத்தில் சமமான அந்தஸ்து வேண்டும் என்று கேட்பது கூட ஒருவகையில் ஆணாதிக்கம் தான். காரணம், பெண்கள் ஆண்களை விட அதிக அந்தஸ்து பெறுவதிலும் எந்தத் தவறும் இல்லையே ? ஏன் சமமான அந்தஸ்துடன் நின்று விட வேண்டும் ? தொடர்ந்து மேலே செல்லலாமே !

அதே நேரத்தில் அன்பின் வெளிப்பாடுகளாய் செய்கின்ற செயல்களைக் கூட ஆணாதிக்கம் எனும் கூட்டில் இட்டு அடைப்பது நேசத்துக்கு எதிராக எறியப்படும் ஆயுதம் என்றே நான் நினைக்கிறேன். பெண்களின் தோளில் கைபோட்டு நடக்கும் தம்பதியரில் நூற்றுக்கு 99 சதவீதம் பேர் இப்படி ஒரு கோணத்தின் யோசித்திருக்கவே மாட்டார்கள்.
இனிமேல் அத்தகைய அன்னியோன்யத் தம்பதியரின் மனதில் இப்படி ஒரு விஷ எண்ணம் முளைக்கும். ஒருவகையில் சமூக அன்னியோன்யத்தின் வேர்களில் ஒரு சந்தேகக் கோடரியை வைத்திருக்கிறார் ஹெலன்.

ஆண்கள் சாதாரணமாகவே சற்று உயரமானவர்கள், பெண்களின் தோளில் கை போடுவது அவர்களுக்கு இயல்பாகவே வருகிறது. பெண்கள் ஆண்களின் இடையில் கை போட்டு நடப்பதோ,

கை கோர்த்து நடப்பதோ இயல்பாக வருகிறது. “இடையில் கை போடுவது, இடையிடையே சண்டை போடுவேன் என்பதன் அறிகுறி“ என யாரும் சொல்வார்களோ என்று பயமாக இருக்கிறது.கணவன் மனைவி அன்பு, அல்லது ஆண் பெண் அன்பு என்பது சில வரையறைகளுக்குள் அடக்கி விட முடியாதது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விருப்பம்.

தனது காதலன் தோளில் கைபோட்டு நடக்க வேண்டும் என விரும்பும் பெண்கள் உண்டு. தோளில் சாய்ந்து கொள்ள வேண்டும் என விரும்பும் காதலர்கள் உண்டு. மனம் என்ன விரும்புகிறதோ, அதையே செயல்கள் செயல்படுத்துகின்றன. ஹெலனுடைய ஆழ் மனதில் ஆணாதிக்கத்தின் ஏதோ ஒரு பாதிப்பு தன்னையறியாமல் உறைந்திருக்கலாம். அத்தகைய எண்ணங்கள் வலுவடைந்து இத்தகைய சிந்தனைகளாய் வெளிவரலாம். உளவியல் இதைத் தான் சொல்கிறது. திருமண உறவு வலுவடைய தீண்டல் மிகவும் அவசியம். கைகோர்த்து நடப்பதோ, அரவணைத்துக் கொள்வதோ, தோளில் கைபோடுவதோ அத்தகைய அன்னியோன்யத்தை பாச நீர் ஊற்றி வளர்க்கின்றன. உரையாடல்கள் எனும் காற்றில் அவை பச்சையம் தயாரிக்கின்றன. புரிதல் எனும் பின்னணியில் அவை கனிகளை விளைவிக்கின்றன. பேசுதல், செவிமடுத்தல், தொடுதல், பகிர்தல், புரிதல் இவையெல்லாமே திருமண உறவை உறுதிப்படுத்தும் அன்பின் கிளைகளே.
குறிப்பாக தொடுதல் என்பது உறவுகளில் மிக முக்கியமானது. அதனால் தான் எத்தனை தான் நெருக்கமாய் நினைத்துக் கொண்டாலும் டிஜிடல் உறவுகள் நிலைப்பதில்லை. அம்மாவின் வியர்வை விழுந்த இன்லண்ட் லெட்டரைப் போல எந்த மின்னஞ்சலும் நமது உயிரின் கதவைத் திறப்பதில்லை.குழந்தை வளர்ப்பில் இந்த தொடுதலை மிகவும் முக்கியப்படுத்துகிறார்கள். கமலஹாசனின் வசூல்ராஜா எம்பிபிஎஸ் சொன்ன “கட்டிப்புடி வைத்தியம்“ அறிவியல் பூர்வமானது. ஒரு குழந்தையை பெற்றோர் பன்னிரண்டு முறை கட்டியணைப்பது அவர்களுடைய உடல், உளவியல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியம் என்கின்றன ஆய்வுகள்.

தொடர்ச்சி 17 ம் பக்கம்....








ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிடம்
உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்
ஆதிவாசி பண்டித் கே.சுவாமி
உறவுச்சிக்கல்கள் - தவறாகப் புரிந்துகொள்ளல் - நிதிச் சிக்கல்கள்
மன அழுத்தம் - காதல்பிரச்சினைகள் - வேலை தேடுதல் - குடும்பவாதங்கள்
குழந்தைகள் இல்லாத தம்பதிகள் - வாகனப் பொருத்தம்
தலை முறை தலைமுறையாக ஜோதிடக் கலையை பயின்றுவரும் ஜோதிடவித்துவான்
பேசும் மொழி தமிழ் கிந்தி மற்றும் ஆங்கிலம்.
கிழமை 7 நாட்களும் 09.00 முதல் 20.00 மணிவரை வரலாம்.
Tel: 0151 66 17 64 16 / 0152 16 75 81 75
Make an Appointment
Prapa Super Market
Hindenburg Straß 212
41061 Mönchengladbach

தமிழ் -யேர்மன்
Nietharshan Magendiran
Vereidigter Dolmetscher und übersetzer
Tamil-Deutsch
Möbil: + 49 176 311 328 73
Email: nietharshan.magendiran@gmail.com

AMMA's food
ammas-food.de
டோட்மூண்ட் நகரில் புதிய உதயம்
அம்மா'ஸ் உணவகம்
அம்மாஸ் உணவகத்தின் சிறப்பு அம்சம் சுவையைச் சுடச்சுடத் தருவதும் ஆகும்.
அறுசுவைக்கறிகளுடன் சோறும், புறியாணியும்
கொத்து ரொட்டி ,இட்டலி , தோசை, வடை இடியப்பம்
இவற்றுடன் இன்னும் இன்னும் உங்கள் விருப்பறிந்து
தரக்காத்திருக்கின்றோம்!
உங்கள் இலத்தின் மங்கல வைபவங்கள் அனைத்திற்கும்
அம்மாவின் சமையலை நினைவூட்டும் உருசியுடன்
தயாரித்து பரிமாறுவோம்!
காலை 11.00 மணி முதல் மாலை 11.00 மணிவரை
செவ்வாய் கிழமை விடுமுறை!




Amma's Food
Rheinische Straße 80A
44137 Dortmund
Tel:0231 33 89 86 91
Fax:0231 33 89 86 93








# காதலியின் தோளில் கை போடலாமா ?

கணவனின் கைகள் தொடவே இல்லை என்று கவலைப்படும் பெண்கள் இருப்பார்களே தவிர, கணவன் தீண்டுகிறான் என பதறும் பெண்கள் இருக்க மாட்டார்கள். காரணம், தொடுதல் என்பது காதல் வாழ்க்கையில் மிக முக்கியமான அம்சம்.

தொடுதல் என்பது காதல் வாழ்க்கையில் மிக முக்கியமான அம்சம். தொடுதல் என்பது பிரியாத பிரியத்தின் வெளிப்பாடு. முதிர் தம்பதியர் பூங்காக்களில் கைகளைக் கோர்த்தபடி மணிக்கணக்கில் அமைதியாய் அமர்ந்திருப்பார்கள். அது அவர்களுடைய அதிகபட்ச அன்பின் பரிமாற்ற நிமிடங்கள் என்பதில் சந்தேகமில்லை.

அன்பு என்பது இதயத்தில் வேர்விட்டுக் கிளைவிடும் விஷயம். அருகருகே அமைதியாய் இருக்கும் தம்பதியர் இதயத்தால் ஆயிரம் மைல் தொலைவில் இருக்கலாம். அல்லது ஆயிரம் மைல் இடைவெளியில் இருக்கும் தம்பதியர் இதயத்தால் இணைந்தும் இருக்கலாம்.

இரண்டு இதயங்கள் ஒன்றாய் இருப்பதில் தான் காதல் வாழ்க்கை அர்த்தப்படுகிறது. எனவே இதயத்தால் ஒன்று படுங்கள் என்பதே முதலாவது தேவை.
இவர் என் கணவன்", "இவர் என் மனைவி" என்று சொல்வது ஒருவரை அடிமைப்படுத்தும் செயலல்ல. இவர் எனது ஆதிக்கத்தில் இருக்கிறார் என்பதன் அடையாளமுமல்ல. நாங்கள் இணைந்து பயணிப்பவர்கள்.

எங்களுக்கு இடையே இடையூறு விளைவிக்க யாரேனும் வந்தால் இணைந்தே சந்திப்போம் என சொல்லும் ஒரு உத்தரவாதம்.

ஆணும் பெண்ணும் சமமெனச் சொல்லவே ஆண்டவர் ஆணின் விலா எலும்பிலிருந்து பெண்ணைப் படைத்தார் என்கிறது கிறிஸ்தவம். சிவனில் பாதியை சக்திக்குக் கொடுத்து, இருவரும் ஒருவர் என விளக்குகிறது இந்துமதம். அதற்காக இருவரும் ஒரே வேலையைச் செய்ய வேண்டுமென்பதில்லை. மிருதங்கமும், புல்லாங்குழலும் ஒரே இசையைத் தருவதில்லை. தாழம்பூவும், தாமரைப் பூவும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அதைப் புரிவதில் தான் இருக்கிறது வாழ்க்கையின் அழகும், அர்த்தமும்.

தங்கள் கருத்துகளைத் தெரிவிக்க அனைவருக்கும் உரிமை உண்டு. அந்தவகையில் ஹெலன் தனது கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார். ஹெலனின் சிந்தனையுள்ள சகோதரிகளுக்கு எனது வேண்டுகோள் ஒன்றே ஒன்று தான். கணவனிடம் சற்றே குனிந்து நடக்கச் சொல்லுங்கள்.

அவர்கள் தோளில் கைபோட்டு நடங்கள். இது பெண்ணாதிக்கம் அல்ல, பாசத்தின் பகிர்ந்தல் மட்டுமே என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

RKL IMMO.de IMMOBILIEN & BAUFINANZIERUNG



Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan|Tel. 05723-914519| www.rklimmo.de|info@rklimmo.de

Sinnadurai.Kiritharan

Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com

**யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் அமைந்துள்ள TKS Best food ஸ்தாபனத்தினர் தங்கள் முதலாவது ஆண்டு நிறைவை மேகா சேல் (19.09.2015) வழங்கிக் கொண்டாடினர்.**
அன்றைய தினம் பொருட்கள் வாங்கியவர்களில் அதிஸ்டசாலி மூவருக்கு பரிசும் கொடுத்து மகிழ்ந்தனர்.

| 1 ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|
| திரு.தம்பிமுத்து | திருமதி. இராமநாதன் | திரு.கலாநாதன் கந்தையா |














## அலை மோதும் ...

8ம் பக்கத் தொடர்ச்சி...

'எனக்கு இந்த நொண்டிச் சாக்கு ஒண்டும் வேண்டாம். தப்பிக்கப் பாக்காதை, இந்தக் கலியாணம் நடக்காட்டி..!'

'சுகி இப்ப ஏன் கோபப்படுகிறாய?'

'இது மட்டும் நடக்காட்டி என்னை உயிரோடு பார்க்க மாட்டாய்.'

எப்படியோ அன்று அவனை மிரட்டிச் சம்மதிக்க வைத்தாள். அவன் சொல்ல வந்தது எதையுமே காதில் வாங்காமல் கலியாணமும் நடந்து முடிந்துவிட்டது. ஆனால் இன்று சுகியின் தேவை வேறாக இருந்தது.

காதலர்களுக்கு காதலிக்கும்போதோ, திருமண மான ஆரம்ப காலங்களிலோ எந்தக்குறையும் பெரிதாகத் தெரிவதில்லை. நல்ல பக்கத்தை மட்டும் பார்த்துக் கொள்வார்கள். சில குறைகள் இருந்தாலும் தங்களுடைய இல்லற வாழ்க்கை பாதிக்கப்பட்டுவிடுமோ என்று பலர் இந்தக் குறைகளை மறைத்து விடுவார்கள். கணவனிடம் இருந்த குறைகளைச் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இருந்த சுகியின் சங்கடத்தைப் புரிந்து கொண்ட அக்கா சுபா அவளிடம் கதை கொடுத்து மெல்ல மெல்ல அவள் மனதில் உள்ளதை அறிந்து கொண்டாள்.

'அப்ப ஏன்டி இதை இத்தனை நாளாய் எங்களிட்ட சொல்லவில்லை'

'அவர் பாவமக்கா' 'பாவமா? பாவம்பார்த்தா, உன்னுடைய வாழ்க்கை..?'

'நானாய் விரும்பித்தானே அவரைக் கலியாணம் செய்தேன்'

'நல்லாயிருக்கு, தன்னுடைய குறைபாட்டை உன்னிடம் மறைச்சது குற்றமில்லையா?'

'அவர் சொன்னாரக்க, நான்தான் கேட்கவில்லை'

'என்னடி சொல்லுறாய்?'

'ஆமாக்கா அவர் தன்னுடைய இயலாமையை பற்றி என்னிடம் அப்போ சொன்னார். அதை நான்தான் வேடிக்கையாய் எடுத்துவிட்டேன். என்னைவிட்டுப் பிரிவதற்கு அவர் சொல்லும் சாட்டாய் இருக்குமோ என்று நான்தான் மறுத்து விட்டேன்.'

'அதற்கு நீ என்ன சொன்னாய்?' 'எப்படியக்கா வெளிப்படையாய் சொல்லுறது. அதனாலே மனசைத்தான் விரும்பிறேன் என்று அப்ப சொன்னேன். ஆனால் இப்பதான் மனசு மட்டுமல்ல உடலும் தேவை என்கிறது புரியுது'.

'சுகி கலியாணம் என்கிறது ஆயிரங்காலத்துப் பயிர் என்று பெரியவங்க சும்மாவா சொன்னாங்க'

'தெரியுமக்கா, புரிந்துணர்வு இருந்தால் இது ஒன்றும் பெரிய விடையமில்லை என்றுதான் நினைத்தேன்'.

'இருக்கலாம், ஆனால் பரம்பரை பரம்பரையாய் சந்ததி தொடருமல்லே, உன்னுடைய பரம்பரைக்கு இத்தோட முற்றுப்புள்ளி வைக்கப்போறியா?'

'நடந்தது நடந்து போச்சு, இப்ப என்ன செய்யச் சொல்லுறாய்?'

'இருந்தாலும் அவனுக்கு மதி எங்கபோச்சு?'

'கலியாணமே செய்ய மாட்டேன் என்று முற்றிலும் மறுத்துவிட்டாரக்கா, நான்தான் அவரை மிரட்டி இந்தக் கலியாணத்தைச் செய்தேன்'

'அவனை நீ மிரட்டினியா?'

'ஆமாக்கா, ஒருத்தருக்கும் தெரியாது, தற்கொலை செய்திடுவேன் என்று மிரட்டித்தான் இந்தக் கலியாணமே நடந்தது.'

'நீ இந்தளவு தூரத்திற்குப் போனியா சுகி?'

'அந்த நேரம் எனக்கு மானப்பிரச்சனை, சொந்த பந்தம் என்ன சொல்லுமோ என்ற பயம் வேறு, எனக்கு வேறு வழியே தெரியல்லே, அதனாலேதான் இந்தக் கலியாணம் நடந்தாலே போதுமென்று ஒற்றைக்காலிலே நின்றேன்.'

நாளாக நாளாக உள்ளத்தைக் காதலிக்கிறேன் என்பதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமாகாது, உடலின்பம் தேவைப்படும்போது குறைபாடுள்ள தம்பதியினருக்குள் கருத்து வேறுபாடு தோன்றலாம். அதன் வெளிப்பாடுதான் இத்தனை நாட்களும் பல்லைக் கடித்துக் கொண்டிருந்த சுகியின் இந்த அழுகையும் ஏக்கமும் என்பதை சுபா புரிந்து கொண்டாள். 'மகிழ்ச்சியான திருமண வாழ்க்கை வாழ, துணையின் உற்சாக ஒப்புதல் இல்லாமல் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம்' என்று குடும்ப வைத்தியர் அன்று குறிப்பட்ட அந்த அறிவுரையையும் மீறித்தான் பிடிவாதமாக சுகி இந்தத் திருமணத்தைச் செய்தாள்.'தன்னை அவன் ஏமாற்றிவிடுவானோ என்ற பயவுணர்வு மட்டும்தான் அன்று அவளிடம் இருந்தது. ஆனால் இன்று அதை எல்லாம் கடந்து அவளது தேவை வேறாக இருந்தது.

மனசு தவிப்பதைத் தாங்கிக் கொள்ளலாம், உடம்பு தகிப்பதை எவ்வளவு காலம்தான் தாங்கிக் கொள்வது?' அதனால்தான் அக்காவிடம் வந்து வார்த்தைகளைக் கொட்டிவிட்டாள்.

'உன்னுடைய அவசரபுத்தி, பிடிவாதம் எல்லாம் உன்னை எங்கே கொண்டுபோய் வைத்திருக்குத் தெரியுதா? என்றாள் சுபா.

'தெரியுதக்கா, இப்ப என்ன செய்யட்டும்? என்றாள் சுகி. 'டாக்டரிடம் கொண்டுபோய் காட்டச் சொல்லு. இப்பதான் எத்தனையோ வசதிகள் இருக்கே, உன்னிலை ஒரு குறையும் இல்லாட்டிக் கவலையைவிடு.' 'பிள்ளைப்பாக்கியம் கிடைக்குமாக்கா?'

'அதுதான் இப்ப எத்தனையோ வழி இருக்கு என்று சொன்னேனே!'

'அவர் டாக்டரிடம் போகமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறார்.' 'டாக்டரிடம் போகாவிட்டால், நீ சட்டத்தரணியிடம் போகவேண்டி வரும் என்று மிரட்டிப்பார். அதற்கும் சம்மதிக்காவிட்டால் அடுத்த படி என்னவென்று பார்ப்போம்'

'வருவாரா..?'

'எப்படி மிரட்டணும் என்று உனக்குச் சொல்லித் தரணுமா?''பார்க்கலாம்' என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள் சுகி.ஆனாலும் தவறு தன்பக்கமும் இருந்ததால் கணவனைக் காட்டிக் கொடுக்க அவள் விரும்பவில்லை.

இதைப்பற்றி யாரிடமும் சொல்லி விட வேண்டாம் என்றும் அக்காவிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு வீடு நோக்கித் திரும்பினாள் சுகி. பெண்களைப் பொறுத்த வரையில் பழமை பேசிக் கொண்டிருப்பதைவிட நல்ல மாற்றங்களை மனதார ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பது நல்லது தான் என்று நினைத்தாள். அக்கா சொன்னதுபோல வைத்தியரிடம் சென்றால் இது போன்ற குறைகளை நீக்கிவிடலாம் என்ற நம்பிக்கை மனதில் துளிர் விட்டிருந்தது. காலம் மட்டுமல்ல, அவள் வாழும் நாடும் மாறிவிட்டிருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். இப்போ பனி கொட்டுவது நின்றுவிட்டதால் போகும் பாதை அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.










# மிருதங்க கலாரத்தினம், தினேஷ்கர் உதயகுமார் அவர்களின்

## மிருதங்கம் - தபேலா அரங்கேற்றம்






கலைமாமணி கே.எஸ்.இராஜ்குமார் அவர்களின் மாணவனும், திரு. திருமதி உதயகுமார் ரூபி தம்பதிகளின் அருமைப் புதல்வனும், Oriental Fine Arts Acadamy-London(OFAAl) பரீட்சைகளில் தேர்ச்சிபெற்று மிருதங்க கலாரத்தினம், மிருதங்க கலாஜோதி, சங்கீத கலாஜோதி ஆகிய பட்டங்களைப் பெற்றவருமான செல்வன் தினேஷ்கர் உதயகுமார் அவர்களின் மிருதங்கம் தபேலா அரங்கேற்றம் 19.09.2015 சனிக்கிழமையன்று ஜெர்மனி பிறேமன் நகரில் சிறப்புற நடைபெற்றது. பல்வேறு தமிழ்க் கலைவிழாக்களைக கண்ட பிறேமன் நகரில் மிருதங்கம் தபேலா அரங்கேற்றம் நிகழ்ந்திருப்பது இதுவே முதன்முறை.

வரவேற்புவாசல் விளக்கேற்றலைத் தொடர்ந்து திரு.திருமதி உதயகுமார் தம்பதிகளால் கலைஞர்களும் இரசிகர்களும் அரங்கினுள் வரவேற கப்பட்டார்கள் ஆரம்பப் பூஜையை கனோவர் நவசக்தி கணபதி ஆலயகுரு பிரம்மஸ்ரீ சுப்பிரமணியம் கிருபாகரசர்மா அவர்கள் தொடக்கிவைத்து ஆசீர்வாதம் வழங்கியபின் மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமாயிற்று. வரவேற்புரையை திருமதி ரூபி உதயகுமார் தமிழிலும், செல்வி தாரணி உதயகுமார் ஜெர்மன் இரசிகர்களுக்காக ஜெர்மன் மொழியிலும் வழங்கினர்.

பிரதம விருந்தினராகக் கனடாவிலிருந்து வருகை தந்திருந்த திரு. ரவீந்திரன் செல்வக் குமாரசாமி (அதிபர், இராகலயம் இசைக்கல்லூரி - கனடா) அவர்களும் கௌரவ விருந்தினர்களாக Herr.Ulrich G.Schlüter (Ortsamtleiter Bremen-Osterholz) அவர்களும், திரு. சோமசுந்தரதேசிகர் (Music- Commitee OFAAL) அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக Frau. Wiltrud Kadelka கலாச்சார நிலையம் ரெனேவர்,திரு. எஸ்.சிறீதரன் (Ge.Co.Ordinater OFAAL) நடன இயக்குனர் திருமதி ராதா சர்மா, ஈழவில்லிசைச் செம்மல் திரு. இ.த.இராஜன்,இசைக்கலைமணி வத்சலா கனகசுந்தரம் இலக்கியச் செம்மல் திரு. இந்துமகேஷ் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கனடா-இராகலயம் இசைக்கல்லூரி அதிபர் திரு. ரவீந்திரன் செல்வக்குமாரசாமி அவர்கள் தினேஷ்கரின் திறமைகண்டு அவருக்கு நாத லய சிரோன்மணி என்று பட்டத்தை கனடா இராகலய இசைக்கல்லூரி சார்பாக வழங்கிப் பாராட்டினார்.

மிருதங்கம் தபேலா அரங்கேற்றத்தின் அணிசெய் கலைஞர்களாக இசைச்சுடரொளி மாணிக்கம் யோகேஸ்வரன் (பாட்டு), திரு. ஸ்ரீபாக்கியராஜா கண்ணன் (வயலின்), தமிழ்த் தவில்வேள் அளவையூர் சுப்பிரமணியம் சுகுமாரன் (கஞ்சிரா), செல்வன் மேர்வின் (மோர்சிங்), செல்வி தாரணி உதயகுமார் (தம்புரா), செல்வன் அருண் மகேஸ்வரன் (கடம்) ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இசைநிகழ்வுகள்மூலம் தனது மிருதங்க தபேலா இசைக்கலைத் திறமைகளை வெளிப்படுத்திய செல்வன் தினேஷ்கர் அவரது குரு கலைமாமணி கே.எஸ் இராஜ்குமார் அவர்களது தயாரிப்பில் அவரது சகோதரி தாரணி உதயகுமார் அபிநயித்த சிவசக்தி நடனத்துக்கும் மிருதங்க இசைவழங்கி தனது திறமையை வெளிப்படுத்தி கலா இரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டார்.

..நாம் புலம்பெயர்ந்து வந்து கால்நூற்றாண்டைக் கடந்துவிட்டோம். எங்கள் தலைமுறையில் புலம்பெயர் மண்ணிலும் நமது கலை கலாச்சாரங்களைப் பேணிப்பாதுகாப்பதில் அரும்பாடுபட்டு அதில் ஓரளவு வெற்றியும் கண்டுவிட்டோம். சஞ்சிகைகள், வானொலிகள், என்று தொடங்கி இன்று, சங்கங்கள் மன்றங்கள் பேரவைகள் என்று வளர்ந்து கலைநிகழ்வுகள் தொலைக்காட்சிகள் என்று தொடர்ந்து ஆலயங்கள் வரை கலாச்சாரத்தில் முன்னேறிவிட்டோம். ஆனால் இது அடுத்த தலைமுறைக்கு எந்த அளவக்கு எடுத்துச் செல்லப்படும் என்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது.




இத்தகையதொரு சந்தர்ப்பத்தில்தான் நம்பிக்கை நட்சத்திரங்களாக இளைஞர்கள் பலர் உருவாகிவருகிறாாகள் அவர்களில் ஒருவராக தினேஷ்கர் உதயகுமாரை நான் இனங் காண்கிறேன். அவரது தந்தை திரு. உதயகுமார் அமைதியான அடக்கமான கலைஞர் என்பது நாம் அறிந்ததே. அவரைப்போலவே மைந்தன் தினேஷ்கரும் கலையார்வம் மிக்கவராக வளர்கிறார் என்பது மகிழ்ச்சிக்குரியதே.

இசைக்கலைமீது ஆர்வம் கொண்ட திருமதி ரூபி உதயகுமாரும் மகனின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு காட்டி வருகிறார் பெற்றோரின் ஊக்குவிப்பும் விடாமுயற்சியும் தினேஷ்கரையும் ஒரு சிறந்த கலைஞனாக வளர்வதற்குரிய உத்வேகத்தைத் தந்திருக்கிறது.கலைமாமணி திரு. கே.எஸ்.இராஜ்குமார் அவர்களைப் போன்ற எங்கள் தலைமுறைக் கலைஞரின் அயராத உழைப்பு என்றும் பாராட்டிற்குரியது.

தொடர்ச்சி 20 ம் பக்கம்








# நீ இன்று நானாக! நான் நாளை நீயா!

## மனிதனை மனிதனாக வாழவைக்கும் கர்மக் கொள்கை!

முதலில் ஒரு மனித உயிரின் பயணம் பற்றிக் காண்போம்! மனிதன் ஒழுக்க நெறியுடனும் வாழ்க்கையில் ஒரு குறிக் கோளுடனும் ஏனோ தானோ என்று வாழாமல் இருப்பதற்கே நம் ஹிந்து தர்மத்தில் பலப்பல தத்துவங்கள் உரைக்கப் பட்டுள்ளன என்றால் அது மிகையாகாது! அதில் முக்கியமானது கர்மா தத்துவம்!

மனிதன் தன் வாழ்நாளில் செய்யும் கர்ம வினைகளே அவனைத் தொடர்ந்து மறுபிறவியில் அனுபவிக்கும் வினை களுக்குக் காரணமாகும் என்பது கர்ம விதிகளில் ஒன்று! இதுவே மனிதனை தீவினைகளை செய்யாதிருக்கும் முகமாக வழிநடத்துகிறது என்றும் கொள்ளலாம்!! இதை அடிப்படையாகக் கொண்டே நாம் சில விஷயங்களுக்கும் நியாயம் கற்பிக்க முடியும்!
சிலர் நாத்திகர்கள் கூறுவார்கள் கடவுள் என்று ஒருவர் இருப்பது உண்மையானால் ஏன் இத்தனை ஏற்றத்தாழ்வுகளை மனிதனுக்கு வைத்து படைக்கிறார் என்று. இன்னமும் சிலர் கடவுளுக்கு மனமிருந்தால் பல குழந்தைகளை பிறவியிலேயே குருடாய், ஊமையாய், இன்னமும் கைகால் விளங்காமலே ஏன் படைக்க வேண்டும்? அவை என்ன பாவம் செய்தன என்றும் கேட்கலாம்.
இவற்றுக்கு சரியான விளக்கம் கர்மா கொள்கையில் உள்ளது! அந்த விளக்கம் மூன்று வகையான தன்மைகளுக்கு சரியான சமாதான விளக்கமாக விளங்குவது இன்னமும் சிறப்பு .

குழந்தை எந்தப் பாவமும் செய்யவில்லை! ஆனால் அது முற்பிறவியில் மனிதனாக இருக்கும் போது செய்த வினைகளின் அடிப்படையில்தான் இந்தப் பிறவியில் அதன் படைப்பு அமைகிறது.
அதனாலேயே முற்பிறவி வினைகளின் காரணமா கவே இப்பிறவியில் அதன் படைப்பு இப்படி அமைகிறது என்பது ஒரு சிறந்த முதல் விளக்கம். இதன் காரணமாகவே தான் மனிதனுடைய வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் உண்டாகின்றன என்பது இந்தக் கொள்கையால் கிடைக்கும் இரண்டாவது விளக்கம்.
இன்னமும் பலர் இப்பிறவியிலே பலப் பல அக்கிரமங்களை செய்தாலுமே கூட அதற்கேற்ற கெடுபலன்கள் எதுவுமின்றி நன்றாகவே வாழ்கின்றனர் என்பது மனிதனுக்கு தர்மம், கடவுள் நம்பிக்கையை இழக்க வைக்கின்றன.

ஆனால் இந்தக் கொள்கையின் மூலம் அவ்வாறு உள்ள மனிதன் அடுத்த பிறவியில் அதன் பலனைப் பெறுவான் என்று சொல்லப்படும் போது மனிதன் அதை நினைத்து சமாதானம் அடைகிறான்.
அது மட்டுமல்ல இப்பிறவியிலேயே யார் எந்த தீய செயல்களை செய்தாலும் கூட தான் அதனால் மனம்மாறாது நற்செயல்களை மட்டுமே புரிய வேண்டும் என்கிற ஒரு எண்ணமும் அவனுக்கு உண்டாகிறது.
இதுவே இந்தக் கொள்கையின் மூன்றாவது விளக்கம் என்றும் கொள்ளலாம். எது எப்படி இருந்தாலும் இந்தக் கொள்கையால் மட்டுமே மனிதன் உலகில் ஓரளவாவது நல்லவனாக இருக்கிறான் வாழ்கிறான் செயல்படுகிறான் என்பது திண்ணம். நன்றி: சிவத்தமிழ்-27

## மிருதங்க அரங்கேற்றம்...

19ம் பக்க தொடர்ச்சி....

தமிழிசைத்துறையின் எதிர்காலம் சிறப்புற அமைவதற்கு இளைய தலைமுறையினரின் பங்களிப்பு இன்றியமையாதது. தினேஷ்கர் போன்று இளங்கலைஞர்கள் மேன்மேலும் வளர்ந்து சாதனைகள் புரிய வேண்டும்.-இவ்வாறு தனது சிறப்புரையில் குறிப்பிட்டார் இலக்கியச் செம்மல் இந்துமகேஷ் அவர்கள்.
அரங்கேற்ற நிகழ்வுகளை அறிவிப்புத் திலகம் திரு. லோப் வலன்ரைன் சிறப்புறத் தொகுத்து வழங்கினார். செல்வி பென்சியா டொன்பொஸ்கோ மொழிபெயர்ப்பு அறிவிப்பாளராக தனது இனியகுரலால் அரங்கேற்ற மேடையை அலங்கரித்தார். அரங்கேற்ற நிகழ்வில் பங்குகொண்ட கலைஞர்களும், அரங்கேற்றம் சிறப்புற அமைய ஒத்துழைத்தவர்களும் திரு.திருமதி உதயகுமார் தம்பதியினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். திரு. உதயகுமார் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுபெற்றது.
செல்வன் தினேஷ்கர் உதயகுமார் தான் தேர்ந்துள்ள கலைத்துறையில் சிறந்து விளங்க வெற்றிமணியும் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக கொள்கிறது.-வெற்றிமணி







**கதை சொல்ல ஓர் கதை...**




**மீரா. குகன்**

# அழகான உலகம்

## பத்துவயது மகளின் பக்குவம்..

இக்கதை மகள் சொல்லத் தாய் எழுதிய சிறுகதை. தொலைக்காட்சி நாடகத்திற்கு ஓய்வுகொடுத்துவிட்டு உங்கள் முன் நிற்கும் குழந்தையை நேசியுங்கள் வாசியுங்கள்.

நட்பு உலகம்

ஒரு மிகப்பெரிய பிரபஞ்சத்தில் 7 நண்பர்கள் மிகவும் நட்புடன் பழகிவந்தனர். இவர்கள் ஒருவரோடு ஒருவர் அன்பாக இருந்ததுடன் ஒற்றுமையாக விளையாட்டுகளில் ஈடுபட்டு மகிழச்சியாகவும் இருந்தனர் . ஒவ்வொரு நாளும் தங்கள் காரியங்கள் எல்லாவற்றையும் முடித்துவிட்டு மாலை நேரங்களில் மிக பிரமாண்டமான மைதானத்தில் கூடி வித விதமான விளையாட்டுகளில் ஈடுபட்டு மனம் மகிழ்வர் . 7 நண்பர்களும் வித்தியாசமான குணயியல்புகளை கொண்டிருந்தனர் . முற்றாக ஒவ்வொருவரிடமிருந்து மற்றவர் வேறுபட்டனர் . தோற்றத்திலும் அவர்களிடம் அவ்வளவாக ஒற்றுமை இருக்கவில்லை . எது எப்படியிருந்தாலும் அவர்கள் ஒன்று கூடி விளையாடும் பொழுது மிக மகிழ்வுடனே விளையாடினர் .
இவர்களின் பெயர்களும் முறையே ஐரோப்பா , ஆசியா , அவுஸ்திரேலியா, வட அமெரிக்கா , தென் அமெரிக்கா , ஆபிரிக்கா மற்றும் அண்டார்டிக்கா என்று வித்தியாசமான பெயர்களை கொண்டிருந்தனர் .
ஒரு நாள் 7 நண்பர்களும் வழமைபோன்று விளையாட கூடியிருக்கையில் இன்று என்ன விளையாட்டில் ஈடுபடுவோம் என்று ஆலோசனை செய்தார்கள் . ஐரோப்பா கால்பந்தாட்டம் விளையாடினால் நன்றாக இருக்கும் என கூற மற்றைய நண்பர்களும் ஆமோதித்தனர் . ஆனால் அமெரிக்கா உடனே குறுக்கிட்டு „நாம் 7 பேர் தான் இருக்கிறோம் . எப்படி இரு அணிகளாக விளையாடுவது என்று மறு கேள்வி கேட்டது ? அதற்கு ஆசியா நாம் ஏன் அணிகளாக விளையாடவேண்டும் . நாம் பந்தை ஒவ்வொருவரிடமிருந்தும் எவர் லாவகமாக பெற்று வெற்றிக்கம்பதுக்குள் அடிக்கிறார்கள் என்று பார்ப்போம். மிகக்கூடிய தடவை பந்தை வெற்றிக்கம்பதுக்குள் அடிப்பவர் வெற்றி பெற்றவராவார்“ என்று யோசனையை முன் வைக்க எல்லோரும் அதை ஏற்றுக் கொண்டனர் .
விளையாட்டு சுவாரசியமாக இருப்பதற்காக ஒருவர் பந்தை இலக்கில் கொண்டு செல்ல இருவர் உதவி செய்வதாகவும் மற்றைய மூன்று நண்பர்களும் பந்தை இலக்கில் விழாதவாறு தடுப்பதாகவும் முடிவு செய்து கொண்டனர் . முதலாவதாக அவுஸ்திரேலியா பந்தை அடிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டார் . அவருக்கு உதவியாக ஆசியாவையும், ஆபிரிக்காவையும் தெரிவு செய்து வட, தென் அமெரிக்கா , அண்டார்டிக்கா மற்றும் ஐரோப்பா தடுக்க ஆயத்தமாக நின்றனர். அவுஸ்திரேலியா மிகவும் சிரமப்பட்டு பந்தை கொண்டு போக ஆசியா மிகவும் உறுதுணையாக நிற்க ஒருவாறு ஒரு இலக்கை அவுஸ்திரேலியா பெற்றுக்கொண்டது. இப்படியே நண்பர்கள் தாங்கள் ஒவ்வொருவரும் இலக்குகளை பெற மிகவும் பிரயத்தனம் செய்தார்கள் . உதவிக்கு சென்ற நண்பர்களை விட பந்து இலக்கில் விழாதவாறு தடுக்க வந்தவர்கள் முழு முயற்சியுடன் தடுத்து பலமுறை பந்தை தாமே தட்டி எடுத்துச் சென்றனர் .

இப்படி விளையாட்டை மிக தீவிரமாக விளையாடுகையில் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா தன்னை நியாயமின்றி தடுத்து விட்டதாகவும், அதனால் தன்னால் பந்தை இலக்கில் அடிக்க முடியவில்லை என்று வீண் கோபம் கொண்டது . அதை மறுத்த தென் அமெரிக்காவுக்கும் வட அமெரிக்காவுக்கும் இடையில் சண்டை மூண்டுவிட்டது . இப்படியே மற்றவர்களும் தங்களுக்குள் தாம் உதவியதால் தான் பந்து இலக்கை அடைந்தது என்றும், இல்லை அது தமது சொந்த திறன் என்றும் வீண் வாக்குவாத பட தொடங்கினர் . சிறிய வாக்குவாதம் முற்றி பெரிய சச்சரவில் முடிந்து நண்பர்கள் ஒருவரோடு ஒருவர் கோபித்துக் கொண்டு கிளம்பிச்சென்றனர் .

மிகவும் நல்ல நண்பர்களாக இருந்தவர்கள் ஒரு சிறிய விளையாட்டினால் நட்பை துறந்துவிட்டனர் . ஆனாலும் அவர்கள் ஒரு சில நாட்களின் பின்னர் கவலை கொள்ள தொடங்கினார்கள் . முன்னர் அவர்கள் 7 பேரும் நண்பர்களாக இருந்தபொழுது எல்லோரும் ஒன்று கூடுகையில் தமது இடத்தின் விசேட பொருட்களை அன்பளிப்பாக கொண்டு சென்று மற்றைய நண்பர்களுடன் பகிர்ந்து மகிழ்ந்தனர். அதாவது ஒவ்வொரு நண்பர்களும் தமது இடத்தின் விசேட உணவு மற்றும் வேறு உற்பத்திகள் பொருட்களை எடுத்துச்செல்வர் . இவை மற்ற இடங்களில் பெற முடியாமல் இருப்பதால் மற்ற நண்பர்களுக்கு இப்பொருட்கள் பெரிதும் உதவியது .




இப்பொழுது ஒருவரோடு ஒருவர் பகை கொண்டிருந்தமையினால் இவர்கள் ஒன்றாக கூடாமல் விட்டுவிட்டனர் . இவர்களது சந்திப்புகள் தடைபட்டமையினால் தமது நண்பர்களிடமிருந்து பெற்று நன்மை அடைந்து வந்த பொருட்கள் யாவும் இல்லாமல் போக பெரிதும் துன்பப்பட தொடங்கினர் . இவர்கள் பொருட்களை விட தங்கள் நட்பு தடைப்பட்டதை தான் எண்ணி மிகவும் வருந்த தொடங்கினார்கள்.

இனியும் பொறுக்க முடியாத நண்பர்கள் ஏழு பேரும் ஒருவரின் வருகையை முன்னரே அறியாமலே தாம் வழக்கமாக கொண்டு செல்லும் உணவு பொருட்களுடன் ஒருநாள் மைதானத்திற்கு சென்றனர் . தமது நண்பர்கள் யாவரும் ஒரே சமயத்தில் கூடியதை கண்டவர்கள் மகிழ்ச்சி பெருக்கோட ஒருவரை ஒருவர் கட்டி தழுவி தங்கள் அன்பை தெரிவித்துகொண்டனர் . உடனே ஒருவரிடம் ஒருவர் மன்னிப்பும் கேட்டுகொண்டனர் . தாங்கள் கொண்டு வந்திருந்த பொருட்களையும் மற்றவரிடம் கொடுத்து மிகவும் சந்தோஷப்பட்டனர் . அன்றிலிருந்து தாங்கள் யாவரும் மிகவும் நட்பாகவும் அன்பாகவும் பழகுவோம் என்று உறுதி பூண்டனர். எல்லோரும் ஒரே சமமான திறமைகொண்டவர்கள் என்பதையும் ஏற்றுக்கொண்டவர்கள் தங்களை ஒரு சேர, ஒரே உலகம் என்ற பெயரையையும் சூட்டி மகிழ்ந்தனர். அன்றிலிருந்து ஒரு ஒற்றுமையான அழகான உலகம் மலர்ந்தது .



# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் ஆடைக் கட்டுப்பாட்டில் தளர்வு!

## நாளுக்கு நாள் நாகரீகம் மாறிடும்போது நாமளும்தான் மாறிகிட்டால் அதில் என்ன கேடு என்கிறார்களா?








புலம்பெயர் நாட்டில் இன்றும் பண்பாட்டுக்கோலத்தின் அளவுகோல் பெரும்பாலும் பழமையே பேணப்படுகின்றது.

தோத்திருவிழாவில் வடம்பிடிப்பவர்கள் இங்கு மாநகர முதலவராக இருந்தாலும் முதல் பாத அணி களட்டிவிட்டே வடம்படிப்பார். சிறுவர் முதல் பெரியவர் வரை சுடும் தெருக்களிலும் பாத அணி இன்றியே வலம் வருவார். மேலாடை இன்றி கோவிலுக்கள் நிற்கும் அளவிற்கு இங்கு அனைத்துக் கோவில்களிலும் வெப்பம் சீராக இருப்பதில்லை. ஒரு சில கோவில்கள் சீரக உள்ளன.எதற்கு எடுத்தாலும் தாயகத்தையே உதாரணமாக எடுத்துக் கூறும் நாம். அங்கு பிள்ளைகளுடன் செல்லும்போது அவர்கள் காணும் காட்சி எதிர்மறையாக இருந்தால் எமது பேச்சுக்கள் நகைப்புக்குரியனவாகிவிடும்.

**யாழ்ப்பாணத்தில் இருந்து திரு. லலீசன் தரும் கருத்து இது.**

எமது பண்பாடு மற்றும் மரபுகளைப் பேணக்கூடிய வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சில சைவ ஆலயங்களாவது செயற்படுகின்றன என எண்ணியிருந்தேன்..

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலுக்கு வழிபாடாற்ற வரும் அடியவர்களின் ஆடைக்கலாசாரம் தொடர்பில் நிர்வாகம் இறுக்கமான கட்டுப்பாடுகளைப் பேணியிருந்தது. ஆண்கள் வேட்டி அணிந்து மேலாடையின்றி ஆலயத்திற்கு வருகை தர வேண்டும். பெண்கள் சேலை அணிந்து தலைமயிரைக் கூட்டிக்கட்டி வரவேண்டும்.

.ஆனால் அங்கு இந்தச் சிந்தனையை எதிர்த்தவர்களின் கருத்து வலுப்பெற்று இப்போது அந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியவர்களை நீக்கிப் புதிய நிர்வாகம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

.ஆலய வருமானத்தை முதன்மைப்படுத்தாமல் சைவப் பண்பாட்டிற்கு முதன்மை கொடுத்து ஆலயத்தில் இறுக்கமான கட்டுப்பாடுகளைப் பேணிய முன்னைய நிர்வாகத்தினருக்கு எனது வாழ்த்துக்கள்.

.

ஆண்கள் மேலாடையின்றி ஆலயத்திற்குள் செல்ல வேண்டும் என்ற இறுக்கத்தை நல்லூர் கண்டிப்பாகப் பேணுகின்றது. நாட்டின் அரசுத் தலைவர்கூட மேலாடையை அகற்றியே உள் நுழைந்தார். ஆனால் நல்லூரில் நாளுக்கு நாள் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதுதானே..

எம்மத்தியில் உள்ள ஓர் ஆலயமாவது இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் இருப்பது எம்மண்ணிற்குப் பெருமை என நினைத்தேன்.

.

அடியவர்களின் விருப்பு இதுவென்றால் “அதுவும் உந்தன் விருப்பன்றே” என ஆறுதலடைய வேண்டியதுதான். (இன்று 18.09.2015 தினகரனில் வெளியாகிய செய்தியே இப்பதிவை எழுதத் தூண்டியது)






காட்டேறி அம்மன் ஜோதிட நிலையம்

பத்திரகாளி அம்மன் பூஜாரி

சுவாமி நாராயணன்

கேரளாவில் இருந்து வந்திருக்கின்றார்

Face Reading

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பரிகாரம் செய்து தரப்படும்.

வீசாப் பிரச்சினை, பணப் பிரச்சினை, வேலைப் பிரச்சினை, கணவன்/மனைவிப் பிரச்சினை, குழந்தையீன்மை மற்றும் பல...






பேசும் மொழிகள்: தமிழ், ஆங்கிலம்

கிழமை 7 நாட்களும் 09:00 முதல் 20:00 மணி வரை வரலாம்

+49(0)15213504803
+49(0)15145849222
Heinrichstr. 26, 44137
Dortmund - Germany





11 ம் பக்கத் தொடர்ச்சி...

இன்முகம் காட்டி வரவேற்கும்




## காலத்திற்கு ஏற்ற அகதிகள்

அன்று இலங்கையில் இருந்து வந்தபோது எமக்கு இப்படியான வரவேற்பு கிட்டவில்லை. காலத்தின் வளர்ச்சியும் ஒரு காரணமாக இருக்கலாம். இங்கு வந்து சொந்தங்களுடன் 4 வருடங்கள் தொலைபேசியில் உரையாட முடியாமல் இருந்தவர்களும் உள்ளனர். கையில் இருந்தமோதிரம் பெண்கள் தங்க நகை இவற்றையெல்லாம் பெருமளவு மறைத்தே வைத்திருந்தனர் காரணம் பல.

இன்று அகதிகளாகவரும் அவர்கள் ஐபோனுடன் வருகிறார்கள் வருவது மட்டுமல்ல அவர்களுக்குசாச் வசதி மற்றம் WI FI வசதிய அதுமட்டுமா நாட்டின் அதிபர் உடன் செல்பி எடுக்கும் அளவிற்கு நெருக்கமான உறவு அனைத்தும் வழங்குகிறது யேர்மனி.

ஏன் இந்த அளவு அகதிகளை வரவேற்கின்றார்கள் என்பதற்கு இன்னுமொரு காரணம் உண்டு. யேர்மனியில் சனத்தொகை இன்னும் 20 வருடங்களில் மிகவும் குறைவாக வரும் என எச்சரிக்கின்றது ஓர் ஆய்வு. ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளை. சில குடும்பங்பளில் நாலு நாய்கள் மட்டுமே! இப்படியே போனால் யார் வேலை செய்வது.

அகதிகளாக வரும் மக்களின் ஒரு சந்ததி நிச்சயமாக கீழ்மட்ட வேலைகளை செய்யத்தயங்க மாட்டார்கள். எனவே குறைந்த செலவில் நிறையவேலை செய்ய மக்கள் தேவை. எனவே இந்த வரவை அரசு வரவாகவே கருதும். நமது தமிழ் மக்கள் அகதி நிலையில் இருந்து மாறி இன்று அதிதியாக வாழத்தொடங்கிவிட்டனர்.

எமது அடுத்த சந்ததி நடுத்தரவேலைக்கு செல்லத் தேவை இல்லை. இப்படியாகப் பார்த்தால் நடுத்தர வேலைக்கும். இந்த நாட்டில் வாழ்பவர் களுக்கு ஓய்வூதியம் வழங்கவும், மனித சக்தி அவசியமாகின்றது. யேர்மன் மக்கள் முன்பு உலகப்போரில் செய்த கொடுமைகளுக்கு இப்போ பரிகாரமாக நீதியாக நடப்பதாகவும் மக்கள் சொல்கின்றார்கள்.

மனிதநேய மிக்க செயல் இது. இருந்தாலும் ஒரு கேள்வி உறுத்தவே செய்கின்றது.

சீரியாமீது இவ்வளவு பரிவுகாட்டும் உலகம் முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தா உயிர் பறிக்கப்படும் போது காட்டாதது ஏன். தமிழர்கள் என்ன பாவப்பட்ட ஜென்மங்களா?



## கதை கதையாம் காரணமாம்

இது 50 சொல்லுக்குள் ஒரு கதை

கே.எஸ்.சுதாகர்

### அப்பு ஸ்ரைல்

பொன்னுத்துரை அவுஸ்திரேலியாவிற்கு வந்தபோது இங்கே கடும் குளிர். புதிதாகப் புட்டுக்குழல் அணிந்து சந்தி வரையும் நடை பழகினார். ஊரில் சாரம் அணிந்தவருக்கு அது புதிசு.

ஆடையில் இருந்து விலைப்பட்டியல் நீண்டு தொங்கியது. எதிரே வந்த சீனாக்காரன் குனிந்து லேபலில் விலையைப் பார்த்தான். 30 டொலர்கள்.

அடுத்தநாள் சீனாக்காரனும் மனைவியும் ஜாக்கிங் வருகையில் அவர்களது ஆடைகளிலும் விலைப்பட்டியல் தொங்கியது.

இப்போது எல்லாரும் லேபலைத் தொங்கவிட்டபடி திரிகின்றார்கள்.

## காதோடு காதாக


கலைக்கதிர் கதிர் துரைசிங்கம்



### வாழ்நாள் சாதனை

செல்லர்: வாழ்நாளில் ஒருவரின் சாதனையை நிர்ணயிப்பது எப்படி?
சோமர்:
வயசை வைத்து ஒரு சாதனைப்பட்டியல் நான் வைச்சிருக்கின்றேன்
செல்லர்: கல்வி செல்வம் வீரம் எண்டு இவைகளை வச்சுத்தான் சாதனையை நிர்ணயிப்பாய் என்று நினைச்சேன் சரி சொல்லும் படடியலை
சோமர்:
04 வயசிலை **உடுப்பில் சிறுநீர் கழிக்காவிட்டால் சாதனை**
12 வயதில் இருபால் நண்பர்கள் குழாம் இருந்தால் சாதனை
16 வயதில் வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரத்துன் பெருந்தெருவில் வாகனம் ஓட்டினால் சாதனை
22 வயதில் முழுநேர நிரந்த வேலையில் இருந்தால் சாதனை
30 வயதில் அடமானக் கடன் எடுத்து வீடு ஒன்று வாங்கினால் சாதனை
50 வயதில் வீடு அடமானக் கடனைக் கட்டிமுடித்தால் சாதனை
70 வயதில் முழுநேர வேலையில் இருந்தால் சாதனை
80 வயதில் வாகனம் வைத்திருந்து பெரும் தெருவில் ஓட முடிந்தால் சாதனை
82 வயதில் இருபால் நண்பர்கள் குழாம் இருந்தால் சாதனை
84 வயதில் **உடுப்பில் சிறுநீர்கழிக்காவிட்டால் சாதனை**

நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு
சூபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!
தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"


வீட்டுக்கடன் 1,6% வட்டிவீதத்திலிருந்து
உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், 60.000€ வரை உடனடி கடன் உதவி!
தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/13029415
0231/10876361
0152/53961138
Th. Gobinath



















Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin

Tamil- Deutsch
Deutsch- Tamil

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்

Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com










# நீங்கள் எந்த வகைத் தம்பதியர்?

சேவியர்

"டைவர்ஸ் தான் ஒரே வழி" என முண்டியடிக்கும் மக்களில் முக்கால் வாசி பேர் புதுமணத் தம்பதியர். ஆண்டு தோறும் டைவர்ஸ் கணக்கு எகிறிக் கொண்டிருப்பதாய் சொல்கின்றன புள்ளி விவரங்கள். "ஒத்து வரலேன்னா டைவர்ஸ் பண்ணிக்கோப்பா" என்பது தான் லேட்டஸ்ட் அறிவுரை. என்னவாயிற்று இந்தியாவின் குடும்ப வாழ்க்கைக் கலாச்சாரத்துக்கு ?

காலில் சக்கரம் கட்டிக் கொண்டு கணவனும் மனைவியும் வேலைக்கு ஓடும் யுகம் இது. நின்று பிரேக் பாஸ்ட் சாப்பிடக் கூட நேரமில்லை. இரவு உணவு பதினொரு மணிக்கோ பன்னிரண்டு மணிக்கோ ! ஒரு வகையில் இந்த பரபரப்பு தான் குடும்ப உறவுகளுக்கு எமனாய் வந்து முடிந்திருக்கிறது. முக்கால் வாசி நேரம் வீட்டுக்கு வெளியே வேலை. அப்பாடா என எப்போதாச்சும் நேரம் கிடைத்தால் டிவியில் உப்பு சப்பில்லாத ஏதோ ஒரு ஷோ. ஒரே வீட்டில் இருந்தாலும் மனம் விட்டுப் பேசி எவ்வளவு நாளாச்சு என கணக்குப் போட்டுப் பாருங்கள். அங்கே தான் இருக்கிறது குடும்ப வாழ்வின் சிக்கல்.

கணவன் மனைவி உரையாடல் சிம்பிள் சமாச்சாரம் கிடையாது. அதில் தெரிந்து கொள்ள நிறைய விஷயங்கள் இருக்கின்றன. தம்பதியர் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்து அதன் அடிப்படையில் உரையாடல் இருக்க வேண்டும் என்கிறார் ரினாடா பாரிஸ் எனும் குடும்ப ஆலோசகர்.

முதல் வகை தம்பதியினர் "அமைதி தம்பதியர்". அமைதி என்றதும் உம்மணாமூச்சியாய் இருப்பார்கள் என நினைத்து விடாதீர்கள். நிறைய பேசுவார்கள். "கந்தசாமில விக்ரம் பிச்சு உதறிட்டாரு இல்ல ? நாலு நாளா வெயில் மண்டையைப் பொளக்குதுப்பா., அமெரிக்காவில இந்த நேரம் ஸ்னோ. என்னவோ தெரியல ஈரான் வேற அணுகுண்டு தயாரிக்கப் போவுதாம்."

இப்படியெல்லாம் சகட்டு மேனிக்கு பேசிக் கொள்வார்கள். ஆனால் தங்களைப் பற்றி மூச்சு விட மாட்டார்கள். சொந்த விருப்பு வெறுப்புகளைப் பற்றியெல்லாம் பேச மாட்டார்கள். "என்ன சோகமா இருக்கே ஏதாவது பிரச்சினையா" என அக்கறையாய் விசாரிக்க மாட்டார்கள். அப்படியே விசாரித்தாலும் "ஒண்ணுமில்லையே" ன்னு சொல்லி விட்டால் ஓகே என விட்டு விடுவார்கள். ஒரு வீட்டில் இருக்கிறார்களே தவிர இவர்கள் இரண்டு வாழ்க்கை வாழ்பவர்கள். இரயில் தண்டவாளங்கள் போல. வாழ்க்கை சந்தோசமாகத் தான் போகும். பெரிய சிக்கல்கள் எதுவும் இருக்காது. ஆனால் என்ன ? ஆத்மார்த்த புரிதலோ அன்போ இருக்காது. வீட்டுக்கு போனா ஒரு துணை உண்டு என சந்தோசப் பட்டுக் கொள்ளலாம். அவ்வளவு தான்.

"சண்டையைத் தவிர்க்கும்" தம்பதியர் இரண்டாவது வகை. "சரி விடும்மா .. நீ சொல்றது தான் சரி" என்பது இந்த வகை தம்பதியினரின் உரையாடல். நம்ம ஊர் கிராமத்து பெண்களை இந்த கூட்டத்தில் கன கட்சிதமாய் பொருத்தலாம். "தேவையில்லாம எதுக்கு சண்டை" என அடுத்தவர் சொல்வதை ஒத்துக் கொள்வது. இல்லாவிட்டால் ஒன்றுமே பேசாமல் சைலண்டாகி விடுவது. இது தான் இவர்களுடைய வழக்கம். அன்னியோன்யமாக இவர்கள் பேசிக்கொள்வதும் ரொம்பக் குறைவு. பேச ஆரம்பிப்பார்கள் திடீரென ஒரு கருத்து வேற்றுமை வரும். உடனே ஒருவர் சைலண்டாகிவிடுவார்.

"எப்போதும் சண்டை" மூன்றாவது வகை தம்பதியர். " சாப்பாட்டுல ஏதோ குறையுதே .." என்று எதார்த்தமாய்ச் சொன்னாலே " ஆமா உங்க அம்மா சமைச்சா மட்டும் தான் உங்களுக்குப் புடிக்கும்" என்பது இந்த ரகம்.

அடுத்தவர் செய்வதிலுள்ள குற்றத்தை பூதக் கண்ணாடி கொண்டு பார்ப்பது இங்கே சகஜம். இது கொஞ்சம் சீரியஸ் கேஸ். பெரும்பாலும் உரையாடல்கள் சண்டையில் தான் முடியும். இந்த தம்பதியரிர் நிம்மதியின்றி பெரும்பாலும் மன அழுத்தத்தில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

"நட்புத் தம்பதியர்" நான்காவது வகையினர். நல்ல நட்புடன் பல விஷயங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். கேஷுவல் கப்பிள் என்று சொல்லலாம். தாம்பத்ய நெருக்கம் இருக்காது. வெளியிலிருந்து பார்ப்பவர்களால் எந்தக் குறையும் சொல்ல முடியாத குடும்பம் இது. இவர்கள் பேச்சில் குறை வைக்க மாட்டார்கள். ஒபாமாவின் ஹெல்த் பிளான் முதல் ஒசாமாவின் அட்டாக் பிளான் வரை பேசுவார்கள். அலுவலக விஷயங்கள், குடும்ப விஷயங்கள் எல்லாம் பேசுவார்கள். ஆனால் ஒரு அழுத்தமான குடும்ப உறவு அவர்களுக்கிடையே இருக்காது.

"நெருக்கமான தம்பதியர்" ஐந்தாவது வகை. "இதுக்கு முன்னாடி ஒருத்தியை காதலிச்சு நாலஞ்சு வருஷம் சுத்தினேன்" என்பது வரை வெளிப்படையாய் பேசுவார்கள். எந்த விஷயத்தையும் மறைக்க மாட்டார்கள். ஆனாலும் ஆழமான குடும்ப உறவும் புரிதலும் இருக்கும். இப்படி வாழ்வது வெகு கடினம். அடுத்தவரை அப்படியே ஏற்றுக் கொள்தலும், அர்ப்பணித்தலும் தான் இதில் ஹைலைட். ரொம்ப ரொம்ப கொஞ்சம் தம்பதியர் தான் இந்த நிலையில் வருவார்கள். உண்மையில் பல தம்பதியர் இதை விரும்புவதே இல்லை.

கணவன் மனைவியரிடையே மனம் விட்டு பேசிக்கிற பழக்கம் இருந்தா போதும், மத்ததெல்லாம் தானா அமைந்து விடும். உரையாடல்களில் மிக முக்கியமான விஷயம் மரியாதை. அடுத்தவர் சொல்வதை கவனமுடனும், நேர்மையாகவும் கேட்பது. தான் புடிச்ச முயலுக்கு மூணு காலுன்னு நினைச்சீங்கன்னா, நோ யூஸ்.

அதேமாதிரி கொஞ்சம் பொறுமை வேணும். பேசறவங்களைப் பேச விடணும். முழுதாகப் பேசி முடிக்கும் முன் "முடிவு சொல்கிறேன் பேர்வழி" என குதிக்கக் கூடாது. கிளைமேக்ஸ் பார்க்காமல் தியேட்டரை விட்டு வெளியேறி கருத்து சொல்வது தப்பில்லையா. உரையாடலை முழுமையாய் கேளுங்கள், பின் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

நிறைய தடவை கேட்டிருப்பீர்கள். இன்னொரு தடவை கேக்கிறதிலும் தப்பில்லை. ஈகோவை தூக்கி தூர எறியுங்கள். கோ...கோ.. ஈகோ ன்னு சொல்லுங்க. தோல்விகள் கூட காதலில் வெற்றிகளே என்பது கில்லாடிகளுக்குத் தெரியும்.


VTM MiniMarkt und Kiosk



துரித
பணமாற்றுச்
சேவை!




உலருணவுப் பொருட்கள்
கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்

இலங்கை, இந்தியா உட்பட உலகின் எந்தப்பாகளுக்கும் அதிகூடியவீதத்தில்
பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள் NSB,BOC,HNB போன்ற வங்கிகளில்
நேரடியாகவும் மற்றும் அனைத்து வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம் செய்யலாம்.

Tel 0203/98418781
E.mail :- vtm2012@hotmail.de
Neudorferstr 173
47057 Duisburg
inh:Pon.Vijayakumar

Buschhausener Str.16/18
46049 Oberhausen
Tel:0208 468 444 21







## நீங்கள் எந்த வகைத் தம்பதியர்?

அடிக்கடி பேசுங்கள். சும்மா ஹாய், பை பேச்சுகளெல்லாம் குடும்ப வாழ்க்கைல உதவாது. தினமும் பேசுங்கள். மனம் விட்டு பேசும் தம்பதிகள் டைவர்ஸ் கேட்டு ஓட மாட்டாங்க.

ஒரு முக்கியமான விஷயம். பேசறதுக்கு முன்னாடி நிலைமையை கொஞ்சம் பாத்துக்கோங்க. பார்ட்டி டென்ஷனாய் இருந்தால் கொஞ்சம் அமைதியா போறது உசிதம். எதேச்சையா சொல்ற சமாச்சாரம் கூட குத்தலா தோணும். மௌனம் கூட உணர்வுகளின் உரையாடல் தான்.

“கல்யாணம் ஆன புதுசில அடிக்கடி வெளியே போவோம்.. இப்பல்லாம் எங்க ஏங்கற நிலமை வரக் கூடாதுங்க ! அப்பப்போ வெளியே போயிட்டு வாங்க. பழைய சமாச்சாரங்களை சுவாரஸ்யமா பேசுங்க. காதல் வாழ்க்கை உயிர்ப்புடன் இருக்கும்.

இன்னொரு விஷயம். உங்களுக்குள்ளே பேசிட்டிருக்கும்போ தேவையில்லாம மூன்றாவது நபரை குத்தம் சொல்லாதீங்க. அது சுத்திச் சுத்தி பிரச்சினையில கொண்டு விடும். வேலில போறதை எதுக்கு… வேணாம் விட்டுடுங்க.

கணவன் மனைவிக்கு கொஞ்சம் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு இருக்கலாம் தப்பில்லை. குறிப்பா சில நம்பிக்கைகள் உங்க துணைக்கு இருக்கலாம். சாமி போட்டோல முழிக்கிறது மாதிரி. அதை சகட்டு மேனிக்கு விமர்சனம் பண்ணாதீங்க.
உரையாடல் எப்பவும் ஸ்மூத்தா இருக்காது. ஏதாச்சும் பிராப்ளம் இருந்தா திறந்த மனதோட யோசிங்க. “நீ சொல்றது தான் தப்புன்னு” சட்டுன்னு குற்றம் சுமத்தாதீங்க. குற்றங்கறது அனுமர் வால் போல நீண்டுகிட்டே இருக்கும் !

பேசும்போ மனசார உண்மையைப் பேசுங்க. நீங்க பேசறது பொய்யின்னு தெரிஞ்சு போச்சுன்னு வெச்சுக்கோங்க, அப்புறம் எப்பவுமே உரையாடல் ஹெல்தியா இருக்காது.

திடீர் திடீர்ன்னு கொஞ்சம் சர்ப்ரைஸ் குடுங்க. சின்னச் சின்ன பரிசுகள், சின்னச் சின்ன வாழ்த்துகள், சின்னச் சின்ன பாராட்டுகள் இவையெல்லாம் ரொம்ப முக்கியம். அதேமாதிரி என்ன முடிவு எடுத்தாலும் இரண்டு பேருமாப் பேசி முடிவெடுங்க.

உங்க ஆளு பேசறதை கவனிங்க. சிம்பிளா கேட்டுட்டு போயிடாதீங்க. நிறைய பேரு பேசறதைக் கேட்பாங்க. ஆனா கவனிக்க மாட்டாங்க. அதென்ன வித்தியாசம் ?
வீட்டுக்குள்ள கிரைண்டர் ஓடுது. அந்த சத்தத்தை நாம கேட்கிறோம் ஆனா, கவனிக்கிறதில்லை. ஆனா நம்ம பார்ட்னர் பேசறதை நாம கவனிக்கணும். என்ன சொல்கிறார் ? என்ன மனநிலையில் சொல்கிறார் ? என்ன நோக்கத்துக்காகச் சொல்கிறார் ?
என்பதெல்லாம் கவனிச்சா தான் புரியும். உங்க வாழ்க்கைத் துணையை எந்த அளவுக்கு நேசிக்கிறீங்க என்பதை இந்த கவனிப்பு காட்டிக் கொடுக்கும் ! அதிகம் கவனித்தால், அதிகம் நெருக்கமாயிடுவீங்க. குடும்ப வாழ்க்கை வலுவடையும். அடுத்தவரைப் பாராட்டும் மனநிலை உருவாகும்.

இதையெல்லாம் மனசுல வெச்சிருந்தா இந்த ஜென்மத்துல இல்ல எந்த ஜென்மத்துலயும் உங்க குடும்ப வாழ்க்கையை யாரும் அசைக்க முடியா




# அடுப்படி 14



புவனம் தர்மரட்ணம்







## Coffee choclate cake



**தேவையான பொருட்கள்**

குளிரான கோப்பி 200 ml
பால்1/8ml
முட்டை 1
கோதுமை மா 175gm (Plain flower)
கொக்கோ பவுடர் 40gm
பேக்கிங் பவுடர் 1.தே.க
சமையல் சோடா 1/2 தே.க
உப்பு 1/4 தே.
சீனி 125 gm
பிறவுன் சீனி 75gm
பட்டர் 125 Gm
வெள்ளை சொக்கலேற் 75gm (தூளாக்கியது) பிறவுன் சொக்கலேற் 3/4 மே.க (தூவுவதற்கு) வனிலா தே.அளவு.
வனிலாஜஸ்கிரீம் தே. அளவு

**செய்யும் முறை**

முட்டையை அடித்து அதில் 125 ml கோப்பி,பாலை நன்றாகக் கலக்கவும். வேறொரு பாத்திரத்தில் மா, கொக்கோ பவுடர், பேக்கிங் பவுடர், சமையல் பவுடர், உப்பு, 75gm,வெள்ளைச் சீனியையும், 75gm பிறவுன் சீனியை யும் கலந்து அடிக்கவும்.

பின் பட்டரை இந்தக் கலவையில் சேர்த்துக் கலந்து,முதல் கலந்ததில் 75gm கோப்பி கலவையையும், வெள்ளை சொக்கலேற்ரையும் சேர்த்து கலந்து விடவும்.

Tray இல் பட்டர் தடவி சேர்த்த கலவையை ஊற்றி 175F இல் 20 நிமிடம் பேக் பண்ணவும். மிகுதி 75gm கோப்பியை யும், சீனியையும் தண்ணீர் விடாமல் அடுப்பில் தடிப்பாக வரும் வரை காய்ச்சி கேக் வெந்ததும் இறக்கி லேசாக ஆறிய பின் ஐஸ் கிரீமை மேலே ஊற்றி, அதன் பின் காய்ச்சிய கிரீமையும் மேலே ஊற்றி உடன் பரிமாறவும்.
முக்கிய குறிப்பு (12) பேருக்குப் பரிமாறலாம்.

## நானே எனக்கு சுமையானேன் என ஒரு செம்மறியாடு அலறியது!



**ஒரு செம்மறியாடு. அதிலிருந்து 40 கிலோ கம்பளி!**

அவுஸ்திரேலியா தலைநகர் கான்பரா அருகே மீட்கப்பட்ட செம்மறியாடு அதன் தோலிலுள்ள கம்பளியின் சுமை தாங்காமல் இறக்கும் அபாயத்தை சந்தித்தது.
ஆனால் இந்த ஆட்டை மீட்ட விலங்கு.ஃ.பிராணிகள் பாதுகாப்பு அமைப்பு RSPCA இந்த ஆட்டின் கம்பளியை வெட்டி அதை மீட்டுள்ளனர். அதிலிருந்து 40 கிலோ கம்பளி எடுக்கப்பட்டுள்ளது. தனியொரு செம்மறியாட்டிடமிருந்து வெட்டியெடுக்கப்பட்ட அதிக கூடிய கம்பளி எனும் சாதனை இதுவாகும்.
இது உலகின் விந்தை செய்தியாகியுள்ளது.

## வெற்றிமணி அன்னையின் 2 ம் ஆண்டு நினைவு அஞ்சலி

03.10.2015



**அமரர் திருமதி நவநிதியம் சுப்பிரமணியம்**

அம்மா உன் அணைப்பில்
வளர்ந்தவர்கள் நாம்.

"காசிக்குபோய் காசிநாதரைக் கண்டேன்
என் நெஞ்சுள்ளே"

என்ற யோகசுவாமிகளது வாசகத்தை
தினம் சொல்வதும், வாழ்வதுமாக, இருந்த அம்மா
உன் ஆத்மா இறைவன் திருவடியில்
ஆறுதல் அடைவதாக

அன்புப் பிள்ளைகள்


# என்னவளும் சீதையே

**இசை: சஞ்ஜே சிவா**

**இயக்கம்: சம்பத்குமார்**
**பாடல்கள் : சேவியர்**
**தமிழகத்தில் படமாக்கப்பட்டது (45 நிமிடம்)**

**யேர்மனியில் திரையிட விரும்புவோர் தொடர்பு கொள்வும்.**
**01575 83 94 325**
**தயாரிப்பு: வெற்றிமணி ,TBB**



**திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!**






## "நீங்களும் பா.உ. நானும் பா.உ."

பேராசிரியர். அ.சண்முகதாஸ்.



கோப்புகளில் சுருக்கக் குறிப்பு இடுவது அதிகாரிகளுடைய வழக்கம். பெரும்பாலும் ஆங்கிலச் சுருக்கக் குறிப்புகளை எழுதுவதே வழக்கம். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் பண்டிதர் கா.பொ. இரத்தினம் கோப்புகளில் தமிழிலே சுருக்கக் குறிப்புகள் இடுவார். ஒரு கோப்பில் "க.க." என்று எழுதினார். பார்த்த அதிகாரி இது என்ன என்று கேட்டார். பண்டிதர் அதற்கு "கண்டேன். கட்டடிவை." என்றார்.

மன்னவன் கந்தப்பு என்றால் யாழ்ப்பாணம் வடமராட்சியில் பலருக்குத் தெரியும். ஆசிரியராகப் பணி செய்தவர். நன்றாக நகைச்சுவையுடன் பேசுவார். நக்கலாகவும் பேசுவார். நல்ல கருத்துகளையும் கூறுவார். அவருடன் பேசினால் நேரம் போவது தெரியாது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு. சிவசிதம்பரம் இவருடைய நல்ல நண்பர். ஒரு தடவை திரு. சிவசிதம்பரம் மன்னவன் கந்தப்பு அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். கடிதத்தின் முடிவில் கையெழுத்திட்டு தன்னுடைய பெயரையும் எழுதியிருந்தார். பெயருக்குப் பின்னால் பா.உ. என்று சுருக்கக் குறிப்பும் எழுதியிருந்தார். மன்னவன் கந்தப்பு கடிதத்துக்கு மறுமொழி எழுதினார். அவரும் கடிதத்தின் முடிவில் கையெழுத்திட்டு தன்னுடைய பெயரையும் எழுதியிருந்தார். பெயருக்குப் பின்னால் பா.உ. என்று சுருக்கக் குறிப்பும் எழுதியிருந்தார். சில நாட்களின் பின் திரு. சிவசிதம்பரம் ஊருக்கு வந்தபோது மன்னவனைச் சந்தித்தார். அப்பொழுது அவர் மன்னவனிடம் "உங்களுடைய கடிதத்தில் உங்கள் பெயருக்குப் பின்னால் பா.உ. என்று எழுதியிருந்தீர்களே" என்று கேட்டார். அப்பொழுது மன்னவன் சொன்னார் "ஓம். நீங்களும் பா.உ. நானும் பா.உ.தான்" என்றார். அது எப்படி என்று திரு. சிவசிதம்பரம் கேட்டார். மன்னவன் சொன்னார் "நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர் அதனால் பா.உ. நான் பாடசாலை உபாத்தியாயர் அதனால் நானும் பா.உ." என்றார்.


செல்வி:நிஷா சிவகுலேந்திரன் அவர்களின்

## பரதநாட்டிய அரங்கேற்றம்

24.10.2015
சனிக்கிழமை
15:00 மணி



யேர்மனி ஆடற்கலாலய அதிபர் ஆடற்கலைமணி திருமதி றெஜினி சத்தியகுமார் அவர்களின் மாணவியும் எங்கள் புதல்வி

நிஷா சிவகுலேந்திரன் அவர்களின்

பரத அரங்கேற்றத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நல்வரைவை
நாடும் பெற்றோரும்
ஆடற்கலாலயமும்

மண்டபம்: 'Gemeinde Haus"
Königsallee 26, 41747 Viersen
Germany


## என் மனக் குழப்பத்தை தீர்த்தது இந்தியக் கோவில்கள்தான்!

### பேஸ்புக் நிறுவனர் மார்க்




இந்தியக் கோவில்களால்தான் நான் என் மனக் குழப்பத்தில் இருந்து வெளியில் வந்தேன் என்று பிரதமர் மோடியிடம் பேஸ்புக் நிறுவனர் மார்க் தெரிவித்தார். கலிபோர்னியாவில் ∴பேஸ்புக் தலைமையகத்தில் நடந்த டவுன்ஹால் நிகழ்ச்சியில் நேற்று பிரதமருடன் உரையாடினார் பேஸ்புக் நிறுவனர் மார்க் ஸுகர்பெர்க்.

அப்போது அவர், சில வருடங்களுக்கு முன் பேஸ்புக் வருவாய் தொடர்பான பிரச்சனைகளில் நான் ஆழ்ந் திருந்தேன். அப்போது மிகவும் குழப்பமான மனநிலையில் நான் இருந்தேன். அதனால் எனது வழிகாட்டியான ஆப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜாப்ஸிடம் இதுபற்றிப் பேசினேன். தனக்கும் இது போன்று ஒரு சூழ்நிலை ஏற்பட்டதாகவும், அப்போது இந்தியா சென்று அங்கே இருந்த கோயில் களுக்குச் சென்று வந்ததில் தெளிவு கிடைத்த தாகவும் சொன்னார். அதனால் நானும் ஒரு மாத காலம் இந்தியா சென்று, அங்கிருக்கும் கோயில்களுக்குச் சென்றேன். கோயில்களில் மக்களிடம் இருந்த பிணைப்பு எனக்குப் புரிந்தது. அதுவே என்னை மேலும் வலுப்படுத்தியது"" என்று தெரிவித்தார்.




# தமிழர் மரபுத் திங்கள் - ஐப்பசி

**(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)**





## கந்தஷட்டி

உலகமெங்கும் வாழும் மக்கள் காலத்தின் கடப்பை இயற்கையின் தோற்றப்பாட்டைக் கொண்டே அறிந்தனர். அந்த வகையில் வானத்து நிலாவைக் கொண்டு முதலில் ஒரு கால வரையறையைச் செய்தனர். அந்த வரையறையில் 30 நாட்கள் ஒரு திங்களாகக் கணிப்பிடப் பட்டது. 12 திங்கள் ஓர் ஆண்டாகக் கொள்ளப்பட்டது. ஐப்பசித் திங்கள் பத்தாவது திங்களாகும். தமிழர் மரபான ஆண்டுக் கணிப்பீடு இற்கையை அடிப்படையாகக் கொண்டமையால் அதுபற்றி அறியத் தருவது பயன் தரும். பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் வாழ்வியலுக்கு ஒரு வரையறை செய்துள்ளது. அக வாழ்வியல் பற்றிய வரையறையில் காலம் பற்றிய செய்திகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஐப்பசித் திங்கள் 'கூதிர்' என்னும் காலப் பகுதியில் அடக்கப்பட் டுள்ளது.

கூதிர் காலத்தில் மழைப் பொழிவு அதிகமாக இருக்கும். 'ஐப்பசி அடைமழை பெய்யும்' என்ற மரபுத் தொடர் தமிழ் மொழியிலே வழக்கில் உண்டு. 'அடை மழை' என்ற தொடர் விடாது தொடர்ந்து பெய்யும் மழையைக் குறிப்பதாகும். ஏறக்குறைய இத்தொடர்மழை மக்கள் வாழ்வியலை இடருக்கு உள்ளாக்குவதால் இத் தொடர் உருவாகியிருக்க வேண்டும். தமிழர் பண்பாட்டில் மழையை 'பெயல்' என்றும் அழைத்தனர். 'பெயல்' என்ற சொல் விடாது பெய்யும் மழையையே குறித்தது. நெடுநல்வாடை என்னும் இலக்கியம் தொடர்மழைக் காலத்தை 'வாடைக் காலம்' என்று குறித்துள்ளது. மழைப் பொழிவால் மக்கள் மட்டுமல்ல விலங்குகளும் பெருந் துன்பத்துக்குள்ளாகின. விளை பொருட்கள் அழிந்தன. வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. மக்கள் இடம் பெயரவும் நேர்ந்தது. இதனால் மழைப் பொழிவையும் இயற்கையின் சீற்றமாக மக்கள் கருதினர்.

ஐப்பசித் திங்களில் தீபாவளி ஒரு பண்பாட்டு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. புராணக் கதை மரபிலே நரகாசுரன் என்ற கொடிய அசுரனின் கொடுமையிலிருந்து மீண்டமைக்காக அவன் இறப்பின்போது அந்த நாளைப் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென அவனுடைய தாயார் கேட்டுக்கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. அந்த நாளிலே நீராடிப் புத்தாடை அணிவர். இனிப்பு வகையான உணவுகளைச் செய்து உண்பர். தீபங்களை வரிசையாக ஏற்றிவைப்பர். இந்நடை முறை காரணமாகவே 'தீபாவளி' என்ற பெயர் வழங்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. தற்காலத்தில் விஞ்ஞான முன்னேற்றத்தால் மின்சார வண்ண விளக்குகளால் வீட்டை அழகு செய்யும் வழக்கம் தோன்றிவிட்டது. உறவினர்களை அழைத்து விருந்தோம்பும் நடைமுறையும் உண்டு. குறிப்பாகப் புதிதாக மணம் முடித்த மணமக்களுக்கு முதல் தீபாவளியைத் 'தலைத் தீபாவளி' எனக் குறிப்பிட்டு சிறப்பாகக் கொண்டாடுவர். பெற்றோர் அவர்களை வீட்டுக்கு அழைத்து புத்தாடை கொடுத்து வருந்தோம்புவர். தீபாவளிக் கொண்டாட்டத்தில் வெடி, வாணம் கொளுத்தி மகிழும் மரபும் உருவாகி தொடர்கிறது. தமிழ்நாட்டில் இக்கொண்டாட்டத்திற்கெனப் புதிய வெடி (பட்டாஸ்) வாணம் என்பன வணிகர்களால் விற்பனை செய்யப்படும். புத்தாடை வணிகமும் பெருமளவில் நடைபெறும். இப்போது உலகம் முழுவதும் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழ்வதால் தீபாவளியும் அதனையொட்டிய வணிகமும் உலகமய மாகிவிட்டன.

தமிழர்களின் வழிபாட்டு மரபிலும் ஐப்பசித் திங்களில் வரும் 'கந்தஷட்டி நோன்பு' சிறப்பானது. கந்தபுராணம் எனும் முருகக் கடவுள் பற்றிய புராணம் இது பற்றிய நடைமுறைக்கு மூலமாக உள்ளது. தேவர்களைத் துன்புறுத்திய சூரபத்மன் என்னும் அசுரனோடு முருகன் ஆறு நாட்கள் போரிட்டு வென்றதாகக் கந்தபுராணம் கூறுகிறது. சூரனுக்கு உதவியாக அவன் தம்பியர் இருவரும் உடன் நின்றனர். முருகன் அவர்களை அழித்தான். அதனால் தேவர்களுடைய பெருந் துன்பம் நீங்கியது. இக்கதை ஈழத்திலே சிறப்பாக யாழ்ப்பாணத்திலே ஐப்பசித் திங்களிலே படிக்கப்படும். முருகன் திருக்கோயில்களில் பலர் காப்புக்கட்டி நோன்பிருந்து முருகனை வழிபடுவர். ஆறாம் நாள் சூரன் போர் நடைபெறும். இந்த நோன்பைக் குழந்தைப் பேறு வேண்டிநிற்போரும் கடைப்பிடிக்கின்றனர். சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்ற முதுமொழியும் தமிழரிடையே வழக்கிலுள்ளது. இங்கு சட்டி என்பது சிலேடையாக உள்ளது. உணவு சமைக்கும் சட்டி என்ற பொருளிலே அமைகிறது. அதனால் அகப்பை என்பது உணவு பரிமாறும் அகப்பையைக் குறிக்கின்றது. ஆனால் உண்மையில் "டி நோன்பைக் கடைப்பிடித்தால் கருப்பையில் குழந்தை வரும் என்பதே பொருளாகும். நோன்பு இருப்பதால் பெண்களின் கருப்பையைச் சுற்றி வளரும் கொழுப்பு மறைந்து விடும். அது குழந்தைப் பேற்றிற்கு வழி வகுக்கும். இந்த ஆறு நாள் நோன்பு இருக்கும் நடைமுறையிலும் வேறுபட்ட நடைமுறைகள் உண்டு. சிலர் ஒரு வேளை உணவை மட்டும் விடுத்து இருப்பர். சிலர் இரவில் மட்டும் சர்க்கரைப் பொங்கல் உண்பர். சிலர் ஆறு நாளும் இரவில் மட்டும் பால் பழம் அருந்துவர். இன்னுஞ் சிலர் ஆறு நாட்களும் ஏழு மிளகும் ஏழு மிடறு தண்ணீரும் உட்கொண்டு நோன்பிருப்பர். முருக வழிபாடும் கந்தஷட்டி நோன்பு நடைமுறைகளும் யாழ்ப்பாணத்தில் பெரும்பாலோரால் கடைப்பிடிக்கப்பட்டதால் யாழ்ப்பாணக் கலாசாரம் 'கந்தபுராணக் கலாசாரம்' என்றழைக்கப்பட்டது. தமிழகத்திலே முருகன் சூரனோடு போர் செய்து வென்ற இடமாகத் திருச்செந்தூர் கருதப்படுகிறது. இக்கோயிலின் பழையபெயர் 'திருச்சீரலைவாய்'என்பதாகும். அதனை நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை என்னும் நெடும்பாட்டுப் பதிவுசெய்துள்ளது. இப்பாடலில் முருக னுடைய திருவுரு சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. பன்னிரு கையும் ஆறு திருமுகமும் பற்றிய விளக்கமும் இடம்பெற்றுள்ளது. இந்த நெடும்பாட்டில் முருகன் வீற்றிருக்கும் திருக்கோயில்கள் சிறப்பாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

மேலைத் தேசத்திலும் ஐப்பசித் திங்கள் இயற்கைத் தோற்றத்தால் எழில் பெற்றதாகும். இத் திங்களின் போது மரங்கள் எல்லாம் வண்ண வண்ண இலைகளைக் கொண்டு விளங்கும். பசுமைத் தோற்றம் மாறி இலைகள் மஞ்சள், சிவப்பு வண்ணம் கொள்ளும். இது நிலமகளுக்கு வண்ண ஆடையாகக் காட்சி தரும். இலைகளின் வண்ணம் மாறுவது ஐப்பசித் திங்களின் வருகையை உணர்த்தி நிற்கும். இது காலத்தைக் காட்ட மரங்கள் கொள்ளும் கோலமாக அமைகிறது. பொது வாகப் பூத்துக் குலுங்கும் மலர்களே புதிய அழகு காட்டும். ஆனால் ஐப்பசித் திங்களில் மரங்களும் இலைகளின் வண்ணத்தை மாற்றிப் புதிய கோலத்தைக் காட்டி நிற்கும். இன்னும் ஜப்பானிய நாட்டிலே சிவந்த இறகைச் சூடி கொடை செய்யும் திங்களாகவும் ஐப்பசித் திங்கள் முதலாம் நாள் நினைவுகூரப்படுகிறது.

எனினும் தமிழர் பண்பாட்டில் இயற்கையின் மாற்றம் வெறுமனே காலக் கணிப்புச் செய்யப் பின்புலமாக அமைந்தாலும் வாழ்வியல் நடைமுறைகளிலும் உணரப்பட நடைமுறைகள் தோன்றி யிருப்பது தமிழர் பண்பாட்டின் சிறப்பை எல்லோரும் அறிய வழிவகுப்பதாக உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.






ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main










# திரிஷ்யம் படம் பார்த்துக் கொலை செய்தேன்!

திரிஷ்யம் படத்தை பார்த்து குற்றங்களை மறைக்கும் தைரியம் வந்தது: பெங்களூர் கோகுல் பரபர வாக்குமூலம். திட்டமிட்ட கொலை ஆஷா இ-மெயில் ஐடியில் இருந்து எனது மனைவிக்கு அனுப்பிய மெயிலில், சம்பவத்தன்று இரவு, மதுபோதையில் இருக்க அறிவுறுத்தியிருந்தேன். அப்படி இருந்தால் தான் பூஜை பலிக்கும் என்று கூறியிருந்தேன். எனது பேச்சை கேட்டு அனுராதாவும், அரை பாட்டில் விஸ்கி குடித்திருந்தார்.

நான் சிலையால் தலையில் அடித்து அவரை கொலை செய்தேன்.

திரிஷ்யம் கொடுத்த தைரியம் கொலை வழக்கில் இருந்து எப்படியும் தப்பித்துவிட முடியும் என்ற தைரியத்தை எனக்கு திரிஷ்யம் திரைப்படம் வழங்கியது. அந்த படத்தில், கொலையை பல்வேறு ஆதாரங்களையும், நிகழ்வுகளையும் உருவாக்கி ஹீரோ மறைத்து போலீசாரிடமிருந்து தப்பிவிடுவார். அதேபோல நாமும் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தினால் தப்பிவிடலாம் என்று நம்பினேன்.

சிம்கார்டு ஐடியா திரிஷ்யம் படத்தில் வரும் ஒரு காட்சியில், கொலையாகும் நபரின் சிம்கார்டை புதிதாக ஒரு போனில் பொருத்தி, அதை லாரியில் போட்டு ஹீரோ அனுப்புவார். அந்த செல்போன் பல நகரங்களுக்கு பயணிக்கும் என்பதால் நம்பரை டிரேஸ் செய்யும்போதுஇ போலீசாருக்கு குழப்பம் ஏற்படும். இதை பார்த்துதான், நானும், ஒரு சிம்கார்டையும், போனையும் சாஜுபெயரில் வாங்கினேன்.சிக்கியது இப்படி ஏர்போர்ட்டுக்கு மிரட்டல் விடுத்ததும் அந்த செல்போனில் இருந்துதான். சாஜுவும்,நானும் ஒரே அப்பார்ட்மென்ட் என்பதால், செல்போனை டிரேஸ் செய்யும்போது எங்கள் பகுதியை போலீசார் சுற்றி வளைப்பார்கள், சாஜுவை கைது செய்வார்கள் என்று நினைத்தேன். அதேபோலத்தான் நடந்தது. ஆனால், நான் வாட்ஸ்சப்பில் அனுப்பிய மெசேஜ் எனது வீட்டு வைப்பை இணையதள கனெக்ஷனை பயன்படுத்தி போயுள்ளது. இதை போலீசார் கண்டுபிடித்துவிட்டனர். திரிஷ்யம் படத்தில் அடுத்தடுத்து ஹீரோ பல ஆதாரங்களை தனக்கு ஆதரவாக உருவாக்குவார். ஆனால் சினிமாவை போல நிஜ வாழ்க்கை இல்லை என்பதை இப்போது புரிந்துகொண்டேன்.

**கவிவாணன்.இரா.சம்பந்தன் அவர்களின்**

## குருதி வரைந்த தடங்கள்

கவிதைத் தொகுதி!



# குருதி வரைந்த தடங்கள்

யாழ். திருநெல்வெலி நாவேந்தன் பதிப்பக வெளியீடாக அண்மையில் தாயகத்தில் வெளியிட்டுவைக்கப்பட்டுள்ளது கவிவாணன். இரா.சம்பந்தன் அவர்களின் குருதி வரைந்த தடங்கள் கவிதைத் தொகுதி!

ஏற்கனவே ஜெர்மனியில் வெளியிடப்பட்ட சம்பந்தன் கவிதைகள்(2002), வைகறையில் ஒரு வானம்பாடி (2008) ஆகிய இரு கவிதைத் தொகுதிகளைத் தொடர்ந்து அவரது மூன்றாவது கவிதைத் தொகுப்பாக 232 கவிதைகளைக் கொண்டு 160 பக்கங்களில் வெளிவந்திருக்கிறது. சம்பந்தன் அவர்களின் மூன்றாவது கவிதைத் தொகுதியாக குருதி வரைந்த தடங்கள் வெளிவந்திருப்பது மகிழ்ச்சி தருவதாக உள்ளது. இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்த ஐரோப்பிய நாடுகளில் இருந்து வெளிவந்த சஞ்சிகைகள், பத்திரிகைகளில் இவரது கவிதைகள் அதிக அளவில் வெளிவந்துள்ளன.

பதினைந்து வயதினில் தாய்மாமனாரின் தூண்டுதலினால் இலங்கைவானொலியில் கவிதை பாடிய சம்பந்தன் 1984ஆம் ஆண்டு முதல் ஜேர்மன் நாட்டின் இராட்டிங்கன் நகரை வாழ்விடமாகக் கொண்டபோதிலும் தாய் மண்ணை மறவாத பற்றுதல், தாய் மொழியில் இலக்கியம் படைக்கும் ஆவல், தாயகத்திலும் வாழ்வகத்திலும் சமகாலத்தில் தரிசித்த - தரிசிக்கும் வாழ்க்கைச் சவால்கள், இன்பதுன்பங்கள், அடிபட்ட மனத்தில் ஆழப்பதிந்துள்ள வடுக்கள், நாள்தோறும் மனத்தை விரட்டிக் கொண்டிருக்கும் தாய்நாட்டுக் கனவுகளும் ஏக்கங்களும் என்றவாறு பல்வேறு கருப் பொருள்களையும் உள்ளடக்கிக் கவிதைகளைத் தந்துள்ளார்.இக் கவிஞனின் படைப்புக்களில் அனேகமானவை எளிமை, பொருண்மை, நடப்பியலுண்மை, கலைத்துவம் முதலியன கொண்டு விளங்குகின்றன. -இவ்வாறு குருதி வரைந்த தடங்கள் நூலுக்கான தனது அணிந்துரையில் குறிப்பிட்டிருக்கிறார் கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு அவர்கள். புலம்பெயர் தேசமொன்றில் இருந்து இந்தக் கவிதைகள் புனையப் பட்டிருந்தாலும் உலகப் பரப்பெங்கும் பரந்து விரிந்த கவிஞனின் உணர்வுகள் இந்தக் கவிதை களெங்கும் புதைந்து கிடக்கின்றன.

உணர்வின் வாய்க்காலில்
ஓடுகின்ற கவிதைகள்
வாசகர்களின் இதயவயலை
ஈரமாக்கிச் செல்லவேண்டும்
அவர்களின் பாரங்களை மெல்ல
இறக்கிவைத்து வெல்லவெண்டும்

எழுதுகோல்களுக்கு.. என்ற தலைப்பிலுள்ள சம்பந்தனின் ஒரு கவிதையின் சில வரிகள் இவை. மற்றவர்களுக்குச் சொல்வதைத் தான் மட்டும் கடைப்பிடிக்காமல் இருப்பாரா கவிவாணன்? இந்தத் தொகுப்பிலுள்ள அத்தனை கவிதைகளும் அவரது கூற்றுக்கு உரிமையுடைத்துள்ளமை சிறப்பு.

குருதி வரைந்த தடங்கள் நூலைப் பற்றிய

தொடர்புகளுக்கு

R.Sampanthan
Bayern Str 4-6
40883 Ratingen
Germany.

NEW ASIA FASHIONS
http://www.newasiafashions.com
இல்லங்களில் இருந்துகொண்டே இணையத்தில் இணையற்ற சேலைகளைத் தெரிவு செய்யலாம்! (EU)
எம்மிடம் பெற்றவர்கள் பெருமகிழ்வு கொள்கிறார்கள்!!



- Contact Numbers
- UK -00442035811020
- 00447448179777
- Swiss- 0041763801073
- Email-info@newasiafashions.com

307 Mitcham Road
Tooting-London
SW17 9JQ / U.K

Milin Impex GmbH
Dortmund நகரில்
இலங்கையர்களுக்கான எவ்வித உணவுப்பொருட்களையும்
மொத்தமாகப் பெற்றுக்கொள் எமது இணையத்தளத்தை நாடவும்
Web :www.milinimpex.de

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen



Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288



## மாறுபட்ட பாத்திரங்களில் நடிக்க எம்மாலும் முடியும் "கமலவதாரம்" எடுத்த நடிகை லட்சுமி பிரியா!



கமலகாசன் படத்திற்கு படம் மாறுபட்ட நடிப்புக்கும் பாத்திரப்படைப்புக்கும் புகழ்பெற்றவர். ஆண்கள் பலர் இப்படி முயற்சி செய்தாலும் நடிகைகள் இவ்வாறு நடிப்பது குறைவு. நடிக்க முடியாது என்று அல்ல, சந்தர்ப்பம் கொடுப்பது குறைவு. தென்னிந்திய சினிமாவே ஆண்களைச் சுற்றியே உள்ளது.( நாடகம் பெண்களைச் சுற்றி) எனவே தனது ஆதங்கத்தை லட்சுமிபிரியா இப்படி வெளிக்காட்டியுள்ளார். கமலின் பல அவதாரங்களை விருமாண்டி முதல் பதினாறுவயதினிலே வரை காட்டியுள்ளார். சரி இனியாவது அவருக்கு சந்தர்ப்பம் கிட்டுமா?

# பாகுபலி வரவில்லை என்றால் புலியின் கதைவேறு!!!

விஜயின் நடிப்பில் பேன்டஸி கலந்த திரைப்படமாக உருவாகியிருக்கும் புலி உலகம் முழுவதும் வெளியாகியிருக்கிறது. படத்தில் ஏராளமான நட்சத்திரங்கள் இணைந்து நடித்திருப்பது மற்றும் விஜய் முதல்முறையாக சரித்திரப் படத்தில் நடித்திருப்பது போன்ற காரணங்களால், ரசிகர்கள் ஆவலுடன் படத்தை பார்த்துத்தள்ளுகிறார்கள். பாகுபலி வரவில்லை என்றால் புலியின் கதை வேறு.

இந்நிலையில் விஜயுடன் இணைந்து நடித்தது மற்றும் புலி திரைப்படம் ஆகியவை குறித்து நடிகை சுருதிஹாசன் முதல்முறையாக பகிர்ந்து கொண்டிருக்கிறார். புலி திரைப்படத்தில் விஜய்யுடன் இணைந்து நடித்தது மிகவும் நல்ல அனுபவம். விஜய் எவ்வளவு பெரிய நடிகர், எவ்வளவு பெரிய ரசிகர்கள் கூட்டம் அவருக்கு பின்னால் இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். எனினும் அதையெல்லாம் காட்டிக்கொள்ளாமல் அமைதியாக அவரது வேலையில் மட்டுமே ஈடுபாடு செலுத்துவார். மேலும் விஜய் ஒரு நல்ல பாடகர் என்பது எல்லோருக்குமே தெரிந்த ஒன்றுதான். புலி திரைப்படம் கண்டிப்பாக குடும்பமாகப் பார்க்கக்கூடிய படம். படத்தைப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் வித்யாசமான அனுபவமும், கண்கவர் ∴.பேண்டஸி விருந்தும் காத்திருக்கிறது".என்று சுருக்கமாக சுருதி சொல்லியுள்ளார்..



## கதைப்பஞ்சமா? இல்லை 2 மணித்தியலத்துக்குள் படம் எடுக்க டியிட்டல் அலுக்குதா?

**பாகம் 2 நடிக்க சிவாஜி , எம்.ஜி.ஆர் மீண்டும் பிறப்பார்களா!**



நயன்தாரா நடித்துள்ள மாயா படத்தைப் பார்த்து ஹாலிவுட் இயக்குநர் எரிக் இங்கிலாந்து மிரண்டு விட்டதாக படத்தின் வெற்றிவிழாவில் படக்குழுவினர் தெரிவித்தனர்.

பேய்ப் படங்களில் சற்று வித்தியாசம் காட்ட முயற்சித்திருக்கிறார்கள் மாயாவில். ஆனால் அதற்காக நயன்தாராவை கோரமாகக் காட்டி ரசிகர்கள் மனசை "நோகடிக்காமல்" துடைத்து வைத்த குத்துவிளக்கு மாதிரி காட்டி ஆறுதல் தருகிறார்கள்.

படத்தை பற்றி இயக்குநர் அஷ்வின் சரவணன் பேசும் போது, "நான் இந்த படத்தின் கதையை எழுதும் போது என் மனதில் யாரையும் வைத்து எழுதவில்லை அதற்கு காரணம், யாரையாவது நினைத்து நான் கதை எழுதி அவர்கள் படத்தில் நடிக்க இயலாமல் போனால் என்னால் அதில் இருந்து வெளியே வர முடியாது. படத்தின் தயாரிப்பாளர் கதை கேட்டவுடன் இந்த கதையில் முக்கிய பாத்திரமாக வரும் அந்த சிங்கள் மதர் கதாபாத்திரத்தில் நன்கு தெரிந்த முகம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று அவர் நினைத்தார். உடனேயே எங்கள் மனதுக்கு நயன்தாரா நடித்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. உடனே தயாரிப்பாளர் நயன்தாராவிடம் பேசி என்னை கதை சொல்ல அனுப்பி வைத்தார். நான் கதையை சொல்லி முடித்ததும் அவருக்கு கதை மிகவும் பிடித்துவிட்டது. இன்று மாயா பெரு வெற்றி பெற்றுள்து..

சரியான கதை அமைந்ததும் மாயாவின் இரண்டாம் பாகத்தை எடுக்கப் போவதாக இயக்குநர் அஸ்வின் சரவணன் கூறினார். இப்போது இரண்டாம் பாகம் எடுக்கும் சீசன் இப்படிப்பார்த்தால் மக்கள் திலகம் எம் ஜி.ஆர் மீண்டும் பிறந்து வந்து உலகம் சுற்றும் வாலிபன்2 அடிமைப்பெண்2 ஆயிரத்தில் ஒருவன் 2 என்றும் நடிகர்திலகம் பிறந்து வந்து புதியபறவை 2 தங்கப்பதக்கம் 2 இருமலர்கள் 2 ஞானஒளி 2 இப்படியே முழுப்படங்களினதும் தொடர்ச்சியை நடித்துதர வேண்டும். அட ஜெயசங்கரின் பட்டணத்தில் பூதம் படத்தை விட்டுவிட்டேன். அதிலும் ஒரு 3 பாகம் எடுக்கலாமே. கதைப்பஞ்சமா? இல்லை 2 மணித்தியாலத்துக்குள் படம் எடுக்க டியிட்டல் அலுக்குதா?





Rathy Jewellers Ltd

The Leading Jewellery store in London with the largest selections

அதிக தேர்வுடன் கூடிய, லண்டனில் முன்னணியில் திகழும் நகைமாளிகை ரதி!

28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063

எப்பொழுதும்
நியாயவிலை
புத்தம் புதுநகைகள்!

Opening Hours
Mon-Sat 10.00 am to 6.30 pm
Sun 12.00 to 6.30 pm

209 upper Tooting Road
Tooting SW17 7TG
0208682 2233






Logan Accountants Ltd

மிகக்குறைந்த கட்டணம் மனம் நிறைந்த சேவை

Milton Keynes Business centre,
Suite 120 Foxhunter Drive
Linford wood
Milton Keynes
MK14 6GD
U.K

jeya@loganltd.co.uk




Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com

# Dividend Allowance

சித்திரை 2016 முதல் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் dividend tax credit என்பது முழுமையாக நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக புதிதாக tax free dividend allowance என்பது அறிமுகப் படுத்தப்பட இருக்கின்றது தற்பொழுது ஒரு தனிப்பட்ட கம்பனியை (limited company) வைத்திருப்பவர் ஒவ்வொரு மாதமும் சம்பளத் தொகையை எடுக்காமல் dividend அடிப்படையில் வியாபாரத்தில் பணத்தை எடுப்பதற்கு கீழ் வரும் காரணங்களை கூறலாம்.

-dividend ஆக எடுக்கும் பணத்திற்கு national insurance செலுத்தத் தேவையில்லை. - வருமான வரி மிக் குறைவாகவே செலுத்தப் படுகின்றது.

புதிய dividend allowance என்றால் என்ன?

நீங்கள் ஒவ்வொரு tax வருடத்திலும் எடுக்கும் முதலாவது £5000 dividend க்கு எந்த வரியும் செலுத்தத் தேவையில்லை
£5000 க்கு மேல் dividend கிடைத்தால் பின்வரும் வீதங்களில் வரி செலுத்த வேண்டும்.

- அடிப்படையான வரி செலுத்துபவர்கள் 7.5% வீதமும்,
- higher rate 40% வரி செலுத்துபவர்கள் 32.5% வீதமும்,
- additional rate tax செலுத்துபவர்கள் 38.1% வீதமும் செலுத்த வேண்டும்

இந்த புதுவகையான திட்டத்தால் அரசாங்கத்திற்கு £2.5 billion அதிகபட்ச வரி அடுத்த 12 மாத காலத்தில் அறவிடப்படவிருக்கிறது.

April 2016ம் ஆண்டு முதல் எவருக்கு இந்தத் திட்டம் பயனுள்ளதாக இருக்கும்?

நீங்கள் அதிகூடிய வரி கட்டுபவராக இருந்து £5000 க்கு கீழ் dividend எடுப்பீர்களாக இருந்தால் எந்தவித வரியும் செலுத்தத் தேவையில்லை ஏன் என்றால் பழைய dividend வரி அடிப்படையில் நீங்கள் £5000 dividend க்கு £1250 வரி செலுத்தி இருப்பீர்கள். அது மட்டுமின்றி 40% வரி செலுத்தும் ஒருவர் புதிய திட்டத்தின் படி £21,500 வரை dividend எடுத்தால் பழயை திட்டத்தின் அடிப்படையில் வரி செலுத்தும் தொகையை விட குறைவான வரியையே புதிய திட்டத்தின் அடிப்படையில் செலுத்துவார்கள்.

புதிய dividend tax திட்டம்- கேள்வியும் பதிலும்

கே: நான் ஆடி 2016ம் ஆண்டு £4000 பணம் dividend டாக எனது கம்பனியில் இருந்து எடுக்க இருக்கிறேன். ஆதற்கு வரி ஏதாவரு செலுத்த வேண்டுமா?

வி: பிதய திட்டம் சித்திரை 16ம் ஆண்டு முதல் அமுழுக்கு வருகின்றது. இதன்படி £5000 க்கு கீழ் ஒரு வரி வருடத்தல் dividend எடுத்தால் எந்த வரியும் செலுத்தத் தேவையில்லை.

கே: எனக்கு சாதாரண வருமானம் £6,500 ஆகவும் dividend வருமானம் £12,000 ஆகவும் இருக்கின்றது. நான் எவ்வளவு வீத வரி செலுத்த வேண்டும் எனக் குறிப்பிடுவீர்களா?

வி: தங்களது personal allowance £11,000, dividend allowance £5000 போக மிகுதி £2,500 க்கு 7.5% வரி மட்டுமே செலுத்த வேண்டும்.

கே: நான் ஒரு கடையில் வேலை செய்கின்றேன். எனது வருடாந்த வருமானம் £20,000 அதை விட £22,000 னளைனைநனெ வருமானமும் கிடைத்துள்ளது. நான் எவ்வளவு வீத வரி செலுத்த வேண்டும் எனக் கூறுவீர்களா?

வி: சம்பளம் £20,000
P.Allowance (£11,000)
= Tax x basic rate £9,000

Dividend income £22,000
Dividend Allowance (£5000)
= Tax x 7.5% £17,000

அதிகளவு வரி செலுத்துவதை எவ்வாறு தவிர்க்கலாம்?

- திருமணம் முடித்தவர்களும், civil partners ம் வரி செலுத்தும் முதலீடுகளை தங்களுக்கு இடையில் பகிர்ந்து வைத்திருப்பதன் மூலம் மொத்தமாக செலுத்தும் வரியை குறைத்துக் கொள்ளலாம்.

- ISA, SIPP போன்ற முதலீட்டில் கூடியளவு முதலீடு செய்ய வேண்டும், ஏன்னென்றால் இதன் மூலம் கிடைக்கும் dividend பணத்திற்கு எந்தவித வரியும் செலுத்த தேவையில்லை.
- Venture capital trust (VCT), offshore investment bond என்பனவற்றில் முதலீடு செய்வது (இலை risky ஆன முதலீடு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது).

